# திறவுகோல்

ஐப்பசி 2049
மாத இதழ்

தன்னம்பிக்கை எனும் போர்வாள்!

பொருளாதார சுதந்திரம்

என் குழந்தையின் பயம்

வடுவூர் ஏரி...

போய் வாரேன்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# அறிவோம் கட்டுமானம் (தமிழில்)



பாலாஜி பிரசாத்

நான் ஒரு கட்டடமைப்பு பொறியாளன் (Structural Engineer). நான் சில ஆண்டுகளுக்கு முன்பு பொறியியல் குறிப்பாக கட்டுமானம் சம்பந்தமான நூல்களை தமிழில் தேடியபோது 1% குறைவாகவே இருப்பது கண்டு மிகவும் வருத்தம் கொண்டேன். தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், தமிழ் பல்கலைகழகம் மற்றும் அண்ணா பல்கலைகழகம் என்று இந்த நிறுவனம் சார்ந்து வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை விரல் விட்டு என்னும் அளவிலான நூல்களே நம் தாய் மொழியில் உள்ளது.

இது ஒரு புறம் இருக்க நம் முன்னோர்களின் கட்டுமான அறிவினை நமக்கு பறைசாற்ற கூடிய தகவல்களோ மிகவும் குறைவு (குறிப்பாக தொழில்நுட்ப அறிவு). கல்வெட்டு பற்றிய செய்தியோ அல்லது தமிழ் இலக்கியங்களில் உள்ள கட்டுமான செய்திகளையோ இன்றைய கல்லூரிகளில் ஒரு பாடமாக கூட எடுப்பதில்லை என்பது ஒருபுறம் வருத்தமான செய்தி. நாம் இன்று பயன்படுத்தும் அனைத்து தொழில்நுட்பமும் ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் பெரும் அளவு நமக்கு தந்தது. குறிப்பாக 16, 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய, ஆங்கிலேய அறிவியல் வளர்ச்சியால் தாங்களே பல கண்டுபிடிப்புகளை கண்டுணர்ந்து இவ்வுலகுக்கு தந்ததாக நமக்கு பாடம் நடத்தி நம்ப வைக்கப்பட்டது. ஆனால் எனக்கு இந்த விசயத்தில் சிறு வயதில் இருந்து நான் சில இடங்களுக்கு செல்லும் போதெல்லாம் சிறு நெருடலாக இருந்தது. அது, 2000 வருட பழமையான கல்லணை ஆகட்டும், 1000 வருட பழமையான தஞ்சை பெருவுடையார் கோவில் ஆகட்டும் ஒரு தலைசிறந்த அறிவியல், கணித வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப அறிவு இன்றி இது எப்படி சாத்தியம் ஆகியிருக்கும். இங்கு வெளிநாட்டினர் நம்மவர்களைப் புகழ்ந்த பின் தான் நமக்கே அதன் பெருமைகள் பல புரிய கூடிய சூழலில் நாம் இருக்கிறோம். இதற்கு சில சான்றுகளாக மேலே கூறிய இரு கட்டுமானத்தைப் பற்றி இங்கு பகிர விரும்புகிறேன்.

இந்திய நீர் பாசனத்தின் தந்தையாக அறியப்படும் ஆங்கிலேயர் சர் ஆர்தர் தாமஸ் காட்டன் கல்லணை பற்றி கூறுகையில் வெள்ளமாய் கரை புரண்டோடும் நீரை தடுத்து, ஆழம் காண முடியாத மணல் படுக்கையில் அடித்தளம் எப்படி கட்டுவது என்று நாம் அவர்களிடம் (தமிழர்களிடம்) தெரிந்துகொண்டோம். இந்த நுட்பத்தினைக் கொண்டு பாலங்களும், அணைக்கட்டுகளும் ஏனைய நீரியியல் கட்டுமானங்களையும் யாம் கட்டினோம். எனவே இந்த மகத்தான சாதனையை செய்த அந்நாளைய மக்களுக்கும் (தொல் தமிழர்கள், கரிகாலன்) நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம் என்று அவர் கூறியதோடு மட்டும் அல்லாமல் கல்லணையை மாதிரியாக கொண்டு கோதாவரி அணை, கும்பகோணம் அருகில் உள்ள கொள்ளிடம் அணைக்கரை போன்றவைகளை கட்டினார். அதுமட்டும் இல்லாமல் இந்த அடிப்படையில் பல கட்டுமானம் அமைய காரணம் ஆனார். இவர் கல்லணையை grand anaicut என்றும் தனது அணைக்கரையை Lower anaicut எனவும் பெயரிட்டு பெருமைப்படுத்தியுள்ளார்.

இரண்டாம் கட்டுமானமான பேரரசன் ராசராசனின் தஞ்சை பெருவுடையார் கோவிலை UNESCO, உலக பாரம்பரிய களம் (world heritage site) என்று பெருமைப்படுத்தியுள்ளது. இன்றளவும் இந்த கோவில் கட்டுமானம் பலருக்கும் விந்தையான மற்றும் மர்மமான ஒன்றாகவே

இருக்கிறது. எந்த தொழில்நுட்பமும் இல்லாத அன்றைய காலகட்டத்தில் இவ்வளவு நேர்த்தியான கட்டுமானம் சாத்தியம் ஆனது என்பதே மிக பெரிய விந்தையான ஒன்று ஆகும். இன்று உள்ள நவீன கட்டுமான தொழில்நுட்பம் கொண்டு இன்னொரு பெரியகோவில் கட்டுமானம் சாத்தியமா என்பது சந்தேகமே. இன்று கட்டுமானத்தின் சிறப்பாக பார்க்கப்படுவது துபாயின் புர்ஜ் கலிஃபா (burj khaleef). இதற்கு காரணம் உலகத்திலயே உயரமான கட்டிடம் என்பதால். உயரம் 828மீ (2717 அடி), கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டு 2010 (ஆதாரம்: http://www.skyscrapercenter.com/buildings). ஆனால் இந்த பெருமை பல நாள் நீடிக்க போவதில்லை காரணம் இதை விட உயரமான கட்டுமானம் இப்போது ஜெத்த நகரில் (சவுதி அரேபியா) நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது ஜெத்த கோபுரம் (jeddha tower). உயரம் 1000 மீ (3281 அடி). தோராயமாக எதிர்பார்க்கப்படும் கட்டுமான முடியும் ஆண்டு 2021. (ஆதாரம்: http://www.skyscrapercenter.com/buildings?list=tallest100&future). எது ஒன்று தனித்தன்மை வாய்ந்த (unique) ஒன்றாக இருக்கிறதோ அதுவே உலக அதிசயம். அப்படி பார்த்தால் தமிழனின் பல தொழில்நுட்பமும் உலக அதிசயமே.

ஆனால் இன்று நாம் கோவிலுக்கு சென்றால் எந்த நேரமும் வெளிநாட்டவர்கள் கையில் புகைப்படக்கருவியோடு நிற்பதை காணமுடியும். நாம் சென்றால் கோவில் இறைவனை அருளை வேண்டிவிட்டோ அல்லது நமது குறை கூறி அழுதுவிட்டோ வந்துவிடுவோம், ஆனால் அவர்கள் அங்குலம்  அங்குலமாக புகைப்படம் எடுத்து அதனை தங்கள் நாட்டுக்கு சென்று ஆய்வு செய்து நம் முன்னோர்களின்  பெருமையை நமக்கு கூறுவர். (பார்க்க நூல்: Tanjavur Brhadisvara an architectural study / Pierre Pichard) அல்லது அந்த அறிவை தங்கள் கண்டுபிடிப்பாக காப்புரிமை பெறுவர், இப்படி நாம் இழந்ததோ அல்லது இழந்துக் கொண்டிருப்பதோ அதிகம். இன்று நம் பாரம்பரிய கட்டுமானம் பற்றிய செய்திகள் பற்றிய நூல்களோ அல்லது ஆய்வுகளோ 80% செய்து இருப்பது வெளிநாட்டினர்,  20% நம் நாட்டை சேர்ந்தவர் அதிலும் தமிழகத்தை சேர்த்தவர்கள் மிகவும் குறைவு என்பது வருந்தத்தக்க விசயம். அதிலும் அந்த துறைசார்ந்தவர்களா என்பது கேள்விக்குறியான ஒன்று. (தொழில் நுட்ப ரீதியான நூல் 1. தஞ்சை பெரியகோவில் - அ. சற்குணன், 2. தஞ்சாவூர் ராஜராஜீஸ்வரம் - கோ.தெய்வநாயகம்).

முன்னர் நடந்த பல படையெடுப்புகள் மூலம் நாம் நம் பல முன்னோர்களின் கட்டுமானங்களையும் அது வழி நம் முன்னோர்களின் அறிவு வளங்களையும்  இழந்தோம். ஆனால் இன்று பல ஆக்கிரமிப்பு, மற்றும் அறியாமையால் (கோவில் சுவற்றில் எண்ணெய் தடவுதல், தேர்வில் தேர்ச்சி பெற வேண்டி தங்களது தேர்வு எண் எழுதுவது, காதல் குறியீடுகள் வரைவது, வெள்ளை அடிப்பது) நம் முன்னோர்கள் கல்வெட்டுக்கள் மூலம் நம்மோடு தொடர்புகொள்ள அல்லது நமக்கு விட்டு சென்ற அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவை அழித்துக்கொண்டு இருக்கிறோம் என்று நினைக்கும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது. நம் முன்னோர்கள் நமக்கு விட்டு சென்ற அரிய பொக்கிசம், அவற்றை பேணி பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமை.

போர்ச்சுக்கீசு, பிரெஞ்சு காலணிகள் 16, 17ஆம் நூற்றாண்டில்  மற்றும் ஆங்கிலயேர் 17ம் நூற்றாண்டில் வணிகம் ரீதியாக இந்தியா குறிப்பாக தமிழகம் வந்த பின் தான் அவர்கள் நாட்டில் பல அறிவியல் புரட்சி நடந்துள்ளது. அதற்கு முன் நம்மோடு இணக்கமாக இருந்த அரேபிய மற்றும் சீனர்கள் மூலம் ஐரோப்பியர்கள் பல அறிவியல் விசயம் கற்றுணர்ந்தனர். உதாரணமாக இன்று வழக்கில் உள்ள எண்களின் வடிவம் அரேபியர்கள் தமிழ் எண்களில் இருந்து உருவாக்கியது. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த  ஃபிபொனாச்சி (fibonacci) என்ற ஐரோப்பிய கணித ஆசிரியர்  சிறுவனாக இருந்த போது அவன் தந்தையின் வேலை காரணமாக

வடஆப்பிரிக்கா செல்கிறான். அங்கு அவன் தந்தையின் வேலை அரேபிய வாணிகர்களோடு தொடர்புள்ளதால் அவர்களிடம் இருந்து இன்று பயன்படுத்தும் பல கணித விவரங்களை சேகரிக்கிறான். அதில் குறிப்பாய் இன்று நாம் பயன்படுத்தும் கணித வடிவங்கள். பின்னர் அதை ஐரோப்பிய நாடுகளுக்கு கொண்டு செல்கிறான். முதலில் அது ஐரோப்பிய மக்களிடையே எதிர்ப்பை கொண்டாலும் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவன் எழுதிய டூடிஞுனுணூ ச்ஞுச்ஞிடி என்ற நூலில் கிந்து-அரபிக் எண்கள் (hindu & arabic numerals) என்று பதிவிடுகிறான். இதில் நாம் புரிந்துகொள்ள வேண்டிய விசயம் கிந்து என்ற சொல்லால் தமிழன் அறிவு நீர்த்துபோனது. (ஆதாரம் : https://www.britannica.com/biography/Fibonacci) தமிழ் எழுத்துக்கள் வழியாக பயின்று வந்த நாம் சில நூற்றாண்டுகள் ஆங்கிலேயே ஆட்சியில் நம் அறிவு மருவிய வடிவத்துக்கு மாறி இருக்கிறோம். பார்க்க கீழே இணைக்கப்பட்ட எண் மாற்றம் தமிழில் இருந்து மாறிய அரேபிய எண் வடிவம் ஆகும்.



படம் 1. (1)

திருக்குறளை புகழும் ஔவை அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் இப்படி அவர் கூறும் பொது பழந்தமிழர்கள் அணுவை பற்றி ஆராய்ந்து அறிந்துள்ளனர். ஒவ்வொரு புலவரும், சித்தர்களும் அணுவைப்பற்றி பலவாராக எழுதி உள்ளனர் ஆனால் அதை நேரடியாக கூறவில்லை அதற்கு காரணம் இந்நாளைய அறிவியல் அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறிய வார்த்தையில் இருந்து நம் மூதாதையர்கள் ஏன் நமக்கு நேரடியாக சொல்லவில்லை என்று விளங்கி கொள்ளலாம். அணுவை பிளந்து அதன் மூலம் ஆற்றல் பெறலாம் என்னும் என் கண்டுபிடிப்பே, என் வாழ்கையில் நான் செய்த பெரும் தவறு, என்று தன் கடைசி நாட்களில் கூறியுள்ளார். (அமெரிக்காவால் சப்பானில் கிரோசிமா, நாகசாகி அணுகுண்டு தாக்குதலுக்கு பின்). இப்படி அறிவியல், கணித உச்சத்தில் இருந்த ஒரு சமூகம் இன்று பிறரின் அறிவு ஊட்டுதலுக்கு ஏங்கி நிற்கும் நிலைக்கு தள்ளபட்டுள்ளோம் என்பது ஒரு வேதனையான விசயம். மேலும் அன்று எது மக்களுக்கான அறிவியல் தேவை என்பதை நன்கு உணர்ந்து அதை மட்டுமே பகிர்ந்துள்ளனர், இயற்கையோடு வாழ்ந்துள்ளனர். இன்று நாம் கண்டுபிடிப்பு என்று கூறும் அனைத்தும் ஒன்று இயற்கைக்கு எதிரான ஒன்று அல்லது நம் அழிவிற்கே காரணமான ஒன்றாக உள்ளது. இன்றைய பல அறிவியல் தொழில் நுட்ப விசயம் தமிழர்களின் அறிவு சார்ந்ததே, அதை வெளிநாட்டினர் எடுத்து சென்று அவர்களின் பெயர் பொறித்து நமக்கே தருவர்.


இன்று நாம் பயன்படுத்தும் நீட்டல் அளவை (linear measurements) சர்வதேச அலகுகள் அமைப்பு (international systems of units SI) நிர்ணயம் செய்தது. ஆங்கிலயேர் காலத்தில் இருந்த அளவை முறை fbs அமைப்பு (feet & pound & second systems) ஆகும். இவற்றிற்கெல்லாம் முன்னோடியாக இருந்தது தமிழர் அளவை முறை என்பது இங்கு பலரும் அறியாத ஒன்று. கீழே இணைக்கப்பட்ட படம் கணக்கதிகாரம் காரிநாயனார் எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவற்றில் இன்று சில வார்த்தை வழக்கில் உள்ளது. உதாரணமாக பூ வாங்கும்போது முழம் கணக்கு, கை சாண் கொண்டு நீள அளவு நிர்ணயித்தல் போன்ற சில. இன்று அளக்க நாம் அளவுகோல் (tape) தேடி ஓட வேண்டும் ஆனால் அன்று அவன் தன் உடலையே அளவை பொருளாக கொண்டு அளந்துள்ளான். விரல், சாண், முழம், அடி இப்படியாக பல பெருமைகள் இன்று நம்மிடம் இல்லாமலே போய்விட்டது. சாண் ஏற முழம் சறுக்கும் என்ற பழமொழி தந்தவன் தமிழன். கூப்பிடும் தூரம் தான் தம்பி அந்த இடம் இங்கிருந்து இன்று வழக்கில் உள்ள வார்த்தை அதற்கும் கணித அளவை வைத்துள்ளது நம் முன்னோரின் சிறப்பு.

படம் 2. (2)

தமிழ் நீட்டலளவை

| | | |
|---|---|---|
| 8 அணு | = | 1 கதிரெழு துகள் |
| 8 கதிரெழு துகள் | = | 1 பஞ்சுத் துகள் |
| 8 பஞ்சுத் துகள் | = | 1 மயிர்முனை |
| 8 மயிர்முனை | = | 1 நுண்மணல் |
| 8 நுண்மணல் | = | 1 சிறுகடுகு |
| 8 சிறுகடுகு | = | 1 எள்ளு |
| 8 எள்ளு | = | 1 நெல்லு |
| 8 நெல்லு | = | 1 விரற்கிடை |
| 12 விரற்கிடை | = | 1 சாண் |
| 2 சாண் | = | 1 முழம் |
| 12 முழம் | = | 1 சிறுகோல் |
| 500 சிறுகோல் | = | 1 கூப்பிடுதூரம் |
| 4 கூப்பிடுதூரம் | = | 1 காதம் |
| 4 காதம் | = | 1 யோசனை |

படம் 3.




(3) தங்களுக்கு எழும் கட்டுமான சந்தேகங்களையும் திறவுகோல் புலனம் செயிலி வாயிலாக கேட்கலாம். எனக்கு தெரிந்த விசயங்களையும் கட்டுரையாக பதிவிடுகிறேன். கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு என்னும் ஔவையின் கூற்றினை இங்கு பதிவு செய்து இங்கு நான் சொல்லிய சிறு தகவல் பலவும், மற்றும் நம் முன்னோர்களின் (தொல் தமிழரின்) கட்டுமான தொழில் நுட்ப அறிவையும் வரும் நாட்களில் கட்டுரை வடிவில் தர கடமைப்பட்டுள்ளேன்.

தாய்மொழி வழி தொழில்நுட்ப கல்வி படிப்பது என்பது ஒரு பிறந்த குழந்தை தன் தாயை இனம் கண்டு இயற்கையாய் பால் அருந்துவது போல (இயற்கை என நாம் அழைக்கும் அனைத்திற்கும் பொருந்தும்) ஒரு இயல்பான விசயம். ஒரு விசயத்தை ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளுக்காண பதிலை தேடி அறிதல். அறிந்த பின் அதனை சிந்தையில் நிறுத்தி பகுத்து பிரித்து ஒரு புரிதலை நோக்கி பயணிக்கிறோம். அப்படி புரிந்துக் கொண்ட எந்த தகவலையும் அப்படியே நம்பாமல் சிந்தித்து மெய்பொருள் காண்பது அறிவு என்ற வள்ளுவரின் கூற்றுப்படி தெளிவுப் பெறுகிறோம். அப்படி தெளிந்த தகவலை நாம் செயல்வடிவம் கொடுக்க முயல்கிறோம். இது கல்வி கற்கும் குறிப்பாக தாய் மொழி வழி கல்வி கற்பவர்களுக்கு இயற்கையாக நடக்கிறது. ஆனால் பிற மொழி கல்வியில் முன்னர் கூறிய ஐந்தும் மூளையில் பல தகவல் பரிமாற்றம் மற்றும் மொழிமாற்றத்திற்கு பின் தான் நாம் செயல்வடிவம் கொடுக்க முடியும். அதுபோக இரண்டாம் மொழி வழி கல்வி கற்கும்போது படிக்கும் செய்தியை மொழிபெயர்த்து செயல்படுத்தவே தாய்மொழி அடித்தளமாக இருக்கிறது.

நம் நாட்டில் பொதுவான கருத்து ஆங்கிலத்தில் படித்தால்தான் அறிவு வளரும் என்பது குறிப்பாக தொழில் வழி கல்விக்கு (மருத்துவம்,பொறியியல்). ஆங்கிலம் என்பது மொழி மட்டுமே ஆனால் அது அறிவாகிவிடாது. English, Its just a language and not a knowledge. இதை நான் இங்கு கூற காரணம் நம்மில் பலர் பல திறமை இருந்தும் இந்த ஒரு காரணத்திற்காக தாழ்வு மனப்பான்மையோடு அடுத்தகட்ட முடிவு எடுக்கமுடியாமல் முடங்கி கிடக்கிறோம். இதுவரை நோபல் பரிசு வாங்கியவர்களில் 60% பேர் தங்கள் தாய்மொழி வழியில் கல்வி கற்றவர்கள் என்று இங்கு நம்மில் எத்தனை பேர் அறிவோம்??

இன்று வளர்ந்த நாடுகளில் அமெரிக்கா, லண்டன் தவிர பிரான்சு, சப்பான், சீனா, ரசியா மேலும் பல ஐரோப்பிய நாடுகளில் இன்றும் அவர்களின் தாய்மொழி வழி கல்வி தான் பயிற்றுமொழியாக

உள்ளது. குறிப்பாக தொழில் கல்வியும் தாய்மொழியில் தான் உள்ளது. அவர்கள் வளர்ந்த நாடாக இதுவும் ஒரு காரணம். அவர்களும் ஆங்கிலம் கற்றுகொள்கின்றனர் ஒரு மொழியாக பிற நாட்டின் மக்களோடு உரையாட மட்டுமே. ஆங்கிலம் வழி பயின்று நாம் வல்லரசு ஆகுவோம் என்பது கால் உடைந்தவன் கோல் கொண்டு நடப்பது போல என்றும் அவன் சொந்த காலில் (தாய்மொழி) நிற்பதுபோல் வராது என்பதை நாம் எண்ணி பார்க்கவேண்டும். குறிப்பாக பெற்றோர்கள் அனைவரும்.

மொழி என்பது வெறும் கருத்து பரிமாற்றங்களுக்கான ஒரு கருவி என்பதைத் தாண்டி அது மக்களின் கலாச்சாரங்களைத் தாங்கி நிற்கும் சாதனமாக உள்ளது. அது மக்களின் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்துள்ளது. தாய்மொழிக் கல்வியால் கலாச்சாரங்களை ஒட்டி கல்வி கற்க முடிகிறது. மக்கள் தங்கள் கலாச்சாரங்களைத் தழுவி வாழ்கின்றனர். இதனால் உலகில் பல்வேறுபட்ட கலாச்சாரங்களைப் பாதுகாக்க முடிகிறது. உலக நாடுகள் அனைத்தும் தாய் மொழிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து அதை நோக்கி நகர்ந்துள்ளன. நம் நாட்டிலும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தாய் மொழி கல்வியை ஆதரித்தால் தான் ஒரு வலிமையான தலைநிமிர்ந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

பொதுவாகவே எனக்குள் இருக்கும் ஒரு ஆதங்கம் அல்லது ஏக்கம் என்றும் சொல்லலாம், பின் குறிப்பிட்டபடி நம் தாய் மொழியாம் தமிழில், பல பதிவுகள் இல்லை அவைகள் பல வரவேண்டும் என்பது என் ஆவல்.

நம் முன்னோர்களின் கட்டுமான அறிவு, அதன் அன்றைய நிலை அது திரிந்து இன்று எவ்வாறு இருக்கிறது என்பதை பற்றி, பழைய நூல்கள் மற்றும் கல்வெட்டு கருத்துக்களின் தொகுப்பு. இன்றைய நவீன கட்டுமானத்தின் வளர்ச்சி, அது சந்தித்து இருக்கும், மற்றும் சந்திக்கும் சவால்கள், அதுக்கு இணையாக நம் முன்னோர்களின் முயற்சி ஏதும் இருப்பின் அது பற்றி கட்டுரைகள் மற்றும் நூல்களின் தொகுப்பு.

சாதாரண பாமாரனும் தங்கள் வாழ்வின் இலட்சியங்களில் ஒன்றாக இருப்பது தனகென்று ஒரு வீடு. இது கற்காலத்தில் வாழ்ந்த மனிதன் தொடங்கி இந்த ஒரு எண்ணம் இருந்ததுக்கு உதாரணம் தமிழர்கள் பல பாடலில் மனிதனின் அத்தியாவசியமாக குறிப்பிடுவது ஊண் (உணவு), உடை, உறைவிடம் இதில் மூன்றாவதாக வரும் உறைவிடம் பற்றிய இன்றய கட்டுமான தேவைகள், சிக்கல்கள், ஆபத்துக்கள், இந்திய தரச்சான்று பணியகம் (Bureau of indian standards BIS) நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச தரத்தின் தேவை (minimum quality requirements) குறித்த பல தகவல்கள் அடங்கிய கட்டுரைகள் மற்றும் நூல்கள் எளிய நடையில் வரவேண்டும்.

மேலே கூறிய தகவல் என்னால் இயன்ற வரை பதிவு செய்யவேண்டும் என்று நினைப்பது உண்டு. அதற்கு திறவுகோல் ஒரு அடித்தளமாக இருப்பதாக கருதுகிறேன். படிக்கும் யாரெனும் ஒருவர் என் வாழ்நாளுக்குள் பயன்பெற்றார்கள் என்று கேட்கும் ஆனந்தமே தமிழுக்கும் என் கல்விக்கும் நான் செய்யும் கைமாறாக எண்ணுகிறேன். இது போன்று பல முயற்சிகள் அனைத்து துறை சார்ந்தவர்களும் முயலும் போது தமிழ் தானாக மீளும் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை என்று நம்புகிறேன்.

ஏன் துறைசார்ந்தவர்களே பெரும் அளவு எழுத வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணம், ஆங்கிலத்தில் Uncle என்று பொத்தம் பொதுவாக கூறிவிடுவார்கள் இதற்கு மாமா என்று

பொருள்படும். ஆனால் தமிழில் ஒவ்வொரு உறவு முறைக்கும் ஒரு பெயர் உண்டு. சித்தப்பா, பெரியப்பா, தாயுடன் பிறந்த தம்பி, தந்தையோடு பிறந்த தங்கை கணவர் இப்படி பலரையும் ஆங்கிலத்தில் அங்கிள் என்ற ஒரு சொல்லில் அடக்குவர். ஆங்கிலத்தில் உள்ள ஒரு கருத்தை ஆழ்ந்து அறிந்து உணர்ந்து பின்னர் அதை தமிழில் பதிவிடுவதற்கும் நேரடி மொழி மாற்றம் அல்லது மொழிபெயர்ப்பதெற்கும் பல வித்தியாசம் உள்ளது. சொல்ல வந்த கருத்து பல இடங்களில் பாழ்படவும் வாய்ப்புள்ளது என்பதை எண்ண வேண்டும்.

அன்பு, நேசம், பாசம், பரிவு, காதல் இப்படி அனைத்து உணர்வையும் Love என்று ஒற்றை சொல்லில் அடக்குவர் அது வரும் இடம் பொருத்து மாறுபடும் ஆனால் இது பற்றிய உணர்வு ரீதியான புரிதல் இருந்தால் தான் அதை சரி வர எழுத முடியும். அதே போன்று தொழில் நுட்ப அறிவு உள்ளவர்கள் அவர்கள் துறை சார்ந்து பதிவிடுவதற்கு, துறை அறிவில்லாதவர்கள் பதிவிடும் போதும் சில முரண்பாடான கருத்தை பதிவிட வாய்ப்புகள் அதிகம் என்று தெளிவுபடுத்த விளைகிறேன். துறைசார்ந்தவர் என்றவுடன் அவர்கள் அந்த துறைசார்ந்து படித்தவர் என்று மட்டும் அல்ல அந்த துறையில் நெடுங்காலம் பணி செய்து அனுபவ அறிவு பெற்றவரும் அடங்குவர்.

பல படங்களின் கரு சிறப்பாக இருக்கும் ஆனால் காட்சிப்படுத்தப்படும்போது அந்த கரு சிதைக்கப்பட்டுவிடும். நான் கல்லூரியில் படித்த காலத்தில் தமிழன் என்ற ஒரு படம் பார்த்தேன். அந்த கதையின் கரு அருமையான ஒன்று. ஒவ்வொரு குடிமகனும் தெரிந்து இருக்க வேண்டிய சட்டத்தின் அடிப்படைகள் மற்றும் அதன் அவசியம் குறித்தும், அதன் முலம் நமது கடமை என்ன?, எப்படி ஓட்டை பயன்படுத்தி நாம் ஏமாற்றப்படுகிறோம், எப்படி நம் அறியாமையை அடுத்தவர்கள் பயன்படுத்தி பயன் அடைகின்றனர், சுரண்டப்படுவதை அறிந்து போராடுவது போன்றவை சொல்ல  எடுத்த கருவை சரியாக கையாளாமல் பல சினிமா தனமான திரைக்கதை, காட்சி அமைப்பு மூலம் சிறந்த கரு சிதைக்கப்பட்டது. இதே போன்று தங்கள் வாழ்நாள் கனவாக கட்டும் வீட்டின் கட்டுமான தேவை, பொருளின் குறைந்தபட்ச தரம், கட்டுமான பொருள்களின் விலை மாற்றம் போன்றவை பற்றிய சிறு விழிப்புணர்வு மக்களிடமும் வேண்டும்.
பொதுவாகவே நான் பார்ப்பது ஒரு கட்டிடம் கட்டுபவராக அல்லது பொறியாளர் கொண்டு தாங்கள் கட்டும் வீட்டிற்கு பின் அவர்களை வேறு ஒரு கட்டுமானத்திற்கு பரிந்துரைப்பது மிகவும் குறைவு. இது மூன்று விதமான நிகழ்வுவாக நான் பார்க்கிறேன்.

பொதுவாகவே ஒவ்வொரு வீடு கட்டுமான முயற்சிக்கும் முன் கட்டபோகும் மேஸ்திரியோ அல்லது பொறியாளரோ ஒரு தோராய மதிப்பீடு மற்றும் செலவு (approximate estimation  costing), கால நேரம் கட்டுமானத்தை முடிக்க (construction timeline)  கூறுவர். அப்படி அவர் கூறிய செலவு தொகையில் இருந்து அதிகமாகவோ அல்லது காலதாமதமாகவோ முடிக்ககூடும் ஆனாலும் தரமான கட்டுமானத்தை செய்திருக்கலாம். இது இன்றைய காலசூழலில் பொருள்களின் விலை ஏற்றத்தாழ்வு மற்றும் தொழிலாளர்கள் கிடைப்பதில் உள்ள ஏற்ற தாழ்வு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இரண்டாமவர் மேற்கூறிய இரண்டையும் சொன்ன நேரத்தில் செய்து முடிப்பவரும் உண்டு இல்லாதவரும் உண்டு ஆனால் தரம் ஒரு கேள்விக்குறியாக இருக்கும். வீட்டுக்கு குடி புகுந்த சில நாளில் பல விரிசல்கள் தென்படுவது, மழை நீர் ஒழுகுதல் மேலும் பல சீர் கேடுகள் கண்டு வீடு கட்டியவர் தன் வாழ்நாள் முழுவதும் மனம் வெம்புவார். மூன்றாமவர் உண்மையில் அனைத்தையும் சிறப்பாக முடிப்பவர் ஆனால் இது காலம் மற்றும் இயற்கையின் கையில் உள்ள ஒரு அதிசய நிகழ்வு. (ideal rare occurance).

மேலே குறிப்பிட்டதில் முதலாமவர் சுகப்பிரசவம் செய்ய முயற்சிக்கும் ஒரு மருத்துவர் அல்லது தாயின் ஆரோக்கியம் கருத்தில் கொண்டு, காலதாமதம் மற்றும் குறுகிய கால போராட்டம் இருந்தாலும் தாய் (வீடு) சேய் (தரம்) நலம் நீண்ட நாள் இருக்க போராடுபவர். இரண்டாமவர் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பெற்றெடுக்கும் தாய். அப்போதைய பிரசவ வலிக்குப் பயந்து இந்த முயற்சியில் ஈடுபடுவதின் மூலம் தற்கால போராட்டம் மூலம் தப்பித்தாலும் (தீர்வுகண்டாலும்) வாழ்நாள் முழுவதும் பல இன்னலுக்கு ஆளாவது உண்டு. அது போன்றது இரண்டாமவரின் செயல்பாடு (சில நேரம் அறுவை சிகிச்சை அவசியமாக இருக்கலாம் அது தவிர்க்க முடியாத ஒன்று).

மூன்றாமர், ஒரு மருத்துவர் எனில் நோய் என்றால் என்ன, அது வர காரணம், வரும் முன் காப்போம் என்ற தமிழரின் எண்ணப்படி எப்படி வராமல் காப்பது, வந்துவிட்டால் வாழ்வியல் மாற்றப்படி எப்படி நம்மை காத்துக்கொள்வது, எப்போது மருத்துவரை கண்டிப்பாக அணுக வேண்டும் என்று பல தகவல்களை தனது நோயாளிக்கு தெளிவுறுத்துவது எப்படி முக்கியமோ அதே போன்று பிற துறை சார்ந்தவருக்கும் சமூக உணர்வுடன் தேவையான விசயங்களை மக்களுக்கு கொண்டு செல்லவேண்டியது பெரும் கடமையில் ஒன்றாகிறது. இதன் அடிப்படையில் ஒரு நிலம் கட்டிடம் கட்ட சிறந்ததா, எப்படி மண்ணின் தன்மை தெரிந்துகொள்வது, இவரே தலை சிறந்தவர்.

கட்டுமானதிற்கு தேவையான பொருளை எப்படி தேர்வு செய்வது மற்றும் தரம் அறிதல், அதை எவ்வாறு பாதுகாப்பது போன்ற விசயங்களை நான் தொடர்ந்து மேலும் பல கட்டுமான தகவல்களுடன் உங்களை சந்திக்கிறேன்.

(தொடரும்)

- பாலாஜி பிரசாத்

**கிறிஸ்ட் பேரஸ்**
கைவண்ணத்தில்....



# காரணப்பாடு (சிறுகதை)

1. ‘‘இந்தா தம்பி, குடி...’’ வீட்டுக்காரர் தேநீர் கொடுத்தார். மெழுகுப்பூச்சு அட்டையால் செய்த குவளையில் வெண்புகை மெல்ல மேலெழும்ப, அதை எடுத்துக்கொண்டான் அவன். மெல்ல நகர்ந்து மேல்மாடிக்கு போகும் படிக்கட்டின் மூன்றாம் கட்டில் அமர்ந்தான். அமரும்போது வலிக்கும் இடுப்பு தசைகள் அவனை மனதுக்குள் நினைக்க வைத்தது.

‘‘இந்த வேலைக்கு இடுப்பு திடமா நிக்கிலன்னா பொழப்பு தடுமாறிப் போயிடும்.’’ வலியில் பிறக்கும் வார்த்தைகள் யாவும் பாமரர் மனதில் பிறந்து பிறந்து இறந்து போவது மிக வழக்கமானது.

அப்போது பாடல் ஒலிக்கும் சத்தம் கேட்டது.

‘‘யாருது.. ஃபோன் அடிக்கிது?’’ வீட்டுக்காரர் கேட்டார்.

‘‘என்னோடதுதாங்க. மேல இருக்கு. தோ.. போய் எடுக்குறேன்.’’ சிமென்ட் கலவை அப்பியக் கால்களோடு பால் பூசப்படாத படிகளில் ஏறிச்சென்றான். முதல் மாடியின் கடைசியில் அவனது ஃபோன் அவனை மெல்லிய இசைப்பாடலால் அழைத்துக் கொண்டிருந்தது.

‘‘ ஹலோ..?’’

‘‘ டேய், நான் பட்டறையிலிருந்து பேசுறன்டா.’’ அவனுக்கு தெரிந்த குரல்தான் பேசியது.

‘‘ ம்.. சொல்லுங்கண்ணா.’’

‘‘ ரெண்டு நாளைக்கு வெளியூர்ல வேலை இருக்கு. லோடெல்லாம் ஏத்தி தயாரா இருக்கு. எறக்குறதுக்கு போலாம். வர்றியா.?’’

‘‘ நானா..? இப்பவா..?’’ இழுத்தான்.

‘‘ இன்னிக்கு நைட்டு கௌம்பனும்.’’

‘‘ ஆனா நான் இப்போ வேலை செஞ்சிக்கிட்டு இருக்கேனே. மேஸ்திரிகிட்ட கேட்டுட்டுதான் சொல்ல முடியும்.’’

‘‘ சரி. கேட்டுட்டு கொஞ்ச நேரத்துல கூப்புடு.’’

‘‘ சரிண்ண...‘‘ இணைப்பு துண்டிக்கப்பட்ட சத்தம் கேட்டு நெடில் குருகி குறிலாக ஒலித்தது அவனது கடைசி வார்த்தை. மேஸ்திரி அங்கு இல்லை. சிறிது நேரம் யோசித்தான்.

அவர் எப்போ வருவார்.? தெரியல அந்த வேலைக்கு போலாமா? போலாம். ஆனா..? என்ன ஆனா...? அவங்க ஏற்கனவே வேலை செஞ்ச பணத்தை இன்னும் தரல. அடிமாட்டு வெலைக்கு வேலைக்கு கூப்பிடுவாங்க. அங்க எப்படி மறுபடியும் போறது ? இப்ப இங்க வேலை இருக்குதா ? இல்ல போல. அப்ப அந்த வேலைக்கு போலாமே. சரி போவோம். ஆனால் ரெண்டு கண்டிசன். ஒன்னு, நான் கேக்குற சம்பளம் எனக்கு வேணும். ரெண்டு, வேலை முடிஞ்சி என் சம்பளத்தோடு ஏற்கனவே தரவேண்டியப் பணத்தையும் சேத்து ஒன்னா தந்துடனும். அப்போ இங்க வேலை

இருக்கானு கேளு. இல்லன்னா இதை அங்க சொல்லிடு. சரிதான்.

தேநீர் அருந்தப்பட்டு காலியான அட்டைக் குவளையைக் குப்பையோடு போட்டு விட்டு கொத்துக்காரரிடம் கேட்டுக்கொள்ள எண்ணி கீழே போனான். மேஸ்திரி வேலைக்கு வைத்தக் கொத்துக்காரர் பீடியைப் புகைத்தபடி நின்றிருந்தார். கெட்டிப்புகை வாயிலிருந்து வெளியே ஊதப்பட்டது.

'' கொத்தே, நாளைக்கு இங்க வேலை இருக்கா.?'' அப்போதுதான் அவர் இதைப்பற்றி யோசிக்கலானார்.

'' இருக்கும். நாளைக்கு வந்தியின்னாக்கா ரெண்டு பேரும் சல்லி போடலாம். குழாய் இன்னும் கீழ எறக்கிட்டு பிளம்பிங் வேலெல்லாம் முடிச்சிட்டு கடைசியா ஒரு மூட்டைக்கு சல்லி போடனும். அதோட.. இந்த இடமெல்லாம்... சரி விடு. சாயங்காலம் பேசிக்கலாம். அப்ப சொல்றேன், இருக்கா இல்லையானு.''

'' சரி. நீ சொன்னாதான் நான் வர்றதுக்கு கொத்தே. நான் வேல செஞ்ச இடத்துல ரெண்டு நாளைக்கு அவசர வேலையாம். ராத்திரிக்கு வரனும்னு கூப்புட்டாங்க. நான் கேட்டுட்டு சொல்றேனு சொன்னேன்.''

'' சாயங்காலம். வேணா வர்றேனு ஒரு வார்த்த சொல்லி வையி.'' என்றார் கொத்து.

அவனது மனதுக்குள் பல எண்ணங்கள் ஒன்றை ஒன்று மடக்கிக்கொண்டு எதைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்ய விடாமல் அலையாடின.

'' வேலைக்கு இங்கயும் வரச்சொன்னா என்ன பண்றதுன்னு தெரியல. எனக்கு இப்போ பணம் நிறையத் தேவைப்படுது. இருக்குற வாடகை வீட்டை காலிப் பண்ண சொல்லிட்டாங்க. வேற வீட்டுக்கு போகனும்னா முன்பணம் நெறைய வைணும். கேஸ் வேற தீந்துடுச்சு. எண்ணை இல்ல. நடுவுல இந்த பிஞ்ச செருப்ப எத்தினி மொற தச்சி போடுறது...!'' அவனது புலம்பலின் வீரியம் முழுமையாகக் கடத்தப்படாமல் போனது. மீண்டும் மேல் மாடிக்கு சென்று பட்டறைக் காரருக்கு ஃபோன் செய்தான்.

'' என்னடா சொன்னாங்க.?''

'' ணா.. வேலைக்கு நான் வர்றதெல்லாம் சரி. ஆனா ரெண்டு கண்டிசன்.''

'' என்னடா கண்டிசன் போடுற.?''

'' ஆமா. ஒன்னாவது,....................'' சொல்லி முடித்தான்.

'' எவ்வளவு சம்பளம் வேணும்.?''

''..........................''

'' எவ்ளோடா பாக்கி வரணும்.?''

''.........................''

'' சரிடா. ரெண்டுநாள் சம்பளத்தை வேலை முடிஞ்சி நீ வாங்கிக்கோ. அந்த பாக்கிப் பணத்த ஆஃபிஸ்ல வாங்கிதான் தரனும். ரெண்டையும் ஒன்னா தரமுடியாது.''

'' நான் கேட்ட சம்பளம் ஒக்கேவா.? சரியா கெடைக்குமா.?''

'' டேய், அதெல்லாம் பாத்துக்கலாம். நீ ராத்திரிக்கு கௌம்பி வா.'' முனவிக்கொண்டு ஃபோனைத் துண்டிப்பதை 'நான் வருகிறேன்' என்று சொல்லுமுன்பாக அவன் கேட்டான். அதற்கு அவனால் எதுவும் சொல்ல இயலாதே.! பட்டறையில் அவன் வேலை செய்தபோது சம்பளத்தை வாங்க எத்தனை நாட்கள் அவன் அலைந்தான் என்று அவனுக்கே தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மூளையின்

ஓரத்தில் இந்த முறையும் சம்பளத்தை இழுத்தடித்தால் என்ன செய்வது என்ற முன்னெச்சரிக்கை உணர்வு லேசாய் தலைத்தூக்கினாலும், பணத்தேவை என்ற முள் குத்தினால் கால் நொண்டிதானே ஆகவேண்டும். கொத்து சத்தமாக அழைத்தபோது வேலையைக் கவனிக்க ஓடினான்.

கட்டிடப்பணியில் ஒரு பகுதியை முடித்துவிட்டு கைக்கால்களைக் கழுவிக்கொண்டு கிளம்புவதற்கு தயாராய் நின்றான். கொத்துக்காரரும் வீட்டுக்காரரும் நாளைக்கு என்ன வேலை செய்ய வேண்டும் என்பதைப்பற்றி பேசிக்கொண்டு வந்தனர்.

‘‘தம்பி, நீ நாளைக்கு முக்கியமா வந்தாகனும். சல்லி போடுறது நாளைக்கு எக்காரணம் கொண்டும் நிக்கக்கூடாது. நீ கண்டிப்பா வந்துடனும். நாளைக்கு வராம போயிடாதப்பா.’’ வீட்டுக்காரர் அழுத்தமாக சொல்லி வேலையை உறுதி செய்தார்.

‘‘ஆமாப்பா. நாளைக்கு சல்லி போட்டே ஆவனும். அப்பதான் மத்த வேலையெல்லாம் கை வைக்க முடியும். அதனால் நீ கண்டிப்பா வந்தாவனும். லீவு போட்டுறாத.’’ கொத்துக்காரரும் வேலைக்கு உறுதி சேர்த்தார்.

இவ்வளவு சொல்றாங்களே... நாளைக்கு இங்கயே வருவோமா.? மனதுக்குள் நினைத்துக் கொண்டான். பட்டறைக்காரரிடம் வேலைக்கு சென்றால் பணத்தை வாங்குவதற்கு அலைய வேண்டும் என்பது உறுதி. அதற்கு பதிலாய் இங்கேயே வரலாம் என்று தீர்மானித்துக் கொண்டான்.

‘‘இன்னிக்கு வெள்ளிக்கிழமையா.. நாளான்னிக்கு என் மனைவிக்கு பொறந்தநாள். நல்ல வேள. நான் அந்த வேலைக்கு போனா பொறந்தநாளுக்கு என்னால அவக்கூட இருக்க முடியாம போயிருக்கும்.’’ சொல்லிக்கொண்டான். வீட்டுக்காரரும் கொத்துக்காரரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

‘‘சரி கொத்து. நான் நாளைக்கு வந்துடுறேன்.’’ சொல்லிவிட்டான். வீட்டுக்கு கிளம்பிச் சென்றான்.

2.

‘‘அண்ணா என்னை மன்னிச்சிரு.’’ வீட்டை அடைந்ததும் முதல் பணியாக பட்டறைக்காரருக்கு ஃபோனில் சொன்னான். ‘‘நான் வரமுடியாது. ஒடனே வேறாளைத் தேடப்பாரு. எங்க மேஸ்திரி என்னை விடுல.’’ தயங்காமல் சொல்லிவிட்டான்.

‘‘ஏன்டா..? இப்ப வந்து இப்படி சொல்றியேடா நீயும் வருலன்னா வேற யாரடா சட்டுனு தேட முடியும்.? கெடைக்க மாட்டாங்கடா. ஏதும் சொல்லாத. நீ வாடா.’’

அது சரிதான். சொல்லி ஒரு மணி நேரந்தான் ஆச்சி. அதுக்குள்ள ரெண்டு நாள் ஆன மாறியே பேசுறதப் பாரு... உள்ளுக்குள் அவர் கூறும் பொய்ச் சொற்களின் வாதம் அவனை அதுவாறு நினைக்க வைத்துவிட்டது.

‘‘அண்ணா, மேஸ்திரி என்னப் புடிச்சி திட்டுறாருணா. ரெண்டு நாளுக்கு ஆம்பளையாளு லீவு போட்டா வேலை எப்படிடா ஆவும் அப்படினு கேக்குறாரு. அதான் சொல்றேன். நீங்க ஒடனே வேற ஆளைப் பாருங்க.’’ பேசி முடித்தான். அப்பாடா ஒரு அலைச்சல் மிச்சம் என்று தப்பியதை எண்ணி மகிழ்ந்துக் கொண்டான்.

3. மறுநாள் காலை அவன் அழைக்கப்பட்ட இடத்திற்கு சென்றான். அவனது வருகையைக் கண்ட வீட்டுக்காரரும் அவர் மனைவியும் அவனை எப்படி ஏறிடுவது என்று தெரியாமல் பார்த்தனர். பிறகு கொத்துக்காரர்தான் சொன்னார்.

‘‘தம்பி, இன்னிக்கு மாசக்கரண்ட். இன்னிக்கு வேலை இல்ல. உனக்கு லீவு.’’ அவர் பட்டென சொன்னதில் இவன் வெட்டுண்டு போனான்.

‘‘எனக்கு லீவா.? நீங்கதானே என்னை அத்தனைமுறை வரச்சொன்னிங்க. இப்ப வேணானு சொல்றிங்க. நீங்க வர சொல்லவும்தான கூப்புட்ட இடத்துக்கும் போகாம இங்க வந்தேன். இப்ப மாத்தி பேசுனா எப்படி கொத்தே..?’’ பொறிந்தான்.

‘ அதுக்கென்ன பண்ணமுடியும்.? கரண்ட் இருந்தாதான் பிளம்பர் வேலை முடியும். அப்பதான் நாம வேலையைத் தொடமுடியும். மாசக்கரண்டுனாலதான் இன்னிக்கு லீவு.’’

‘‘ஏன் இத நேத்தே சொல்லல? சொல்லியிருந்தா நேத்தே என்னைக் கூப்பிட்ட வேலைக்கு போயிருப்பனில்ல. கூப்புட்டுட்டு இப்ப வேணாம்னா எப்படி..?‘‘ வீட்டுக்காரரைத் தேடினான். அவர் அங்கில்லை.

‘‘கரண்ட் வந்தாதான் வேலை உனக்கு. வேணா வீட்டுக்காரர்கிட்ட செலவுக்கு பணம் வாங்கிக்கிட்டு போ.’’

‘‘அதற்கு மேல் அவனால் ஒன்னும் பேச முடியவில்லை. உள்ளதும் போச்சடா நோபாளராசா என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டான். முன்பே அவ்விடத்தை விட்டு வீட்டுக்காரரைத் தேடிக்கொண்டு போனான்.

‘‘அண்ணா, நான் கௌம்புறேன். கொஞ்சம் செலவுக்கு பணம் குடுங்க.’’ வீட்டுக்காரர் தன் மனைவியிடம் சென்று பணம் கொடுக்கச் சொல்லி அனுப்பினார்.

‘‘செலவுக்கு பணம் வாங்கிக்கோ. ஆனா சம்பளத்துல கழிப்பேன்.’’ என்றார் வீட்டிற்கு உள்ளிருந்து வந்தவர்.

‘‘சம்பளத்தில கழிக்கிற அளவுக்கு பாக்கி பணம் எனக்கு தரவேண்டியது ஏதுமில்லைங்க. எனக்கு கை செலவுக்கு மட்டும் குடுங்க. வேலைக்கினு வந்துட்டு ஏதுமில்லாம எப்படி போறது.?’’

‘‘நாங்க எங்கப்பா வரச் சொன்னோம்.?’’

‘‘நீங்க சொல்லல. அண்ணந்தான் வரச் சொன்னாரு. நாளைக்கு ஒருநாள் கண்டிப்பா வரனும்னு சொன்னாரு.

‘‘ஏங்க, வரச் சொன்னிங்களா?’’ அவருக்கு ‘ஆமாம்’ என்ற பதில் கிடைத்தது. இவனுக்கு செலவுக்கு பணம் கிடைத்தது. வாங்கிக்கொண்டு நாளை அவனது மனைவிக்கு என்ன பரிசு தரலாம் என்று யோசித்தபடி கிளம்பினான்.

அவனது ஒரு நாள் பிழைப்பு பயனற்று போனதற்கு யார் தான் காரணம் என்று நீங்களே கூறுங்களேன்.

~ கார்த்தி டாவின்சி

# தன்னம்பிக்கை எனும் பேராற்றல்!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

ஆயிரம் தெய்வங்களின் மீது நம்பிக்கை வைத்து..
உன் மீது நம்பிக்கை வைக்கவில்லையென்றால்
உன்னை விட நாத்திகன் இந்த உலகத்தில் வேறு யாருமில்லை
என்று சொன்னார் சுவாமி விவேகானந்தர்

தன்னம்பிக்கை என்பது முதலில் ஒரு மனிதன் தன்னை நம்புவது,தனக்குள்ளே ஆற்றல் இருக்கிறது என்பதை உணருவது ஆகும்.ஒவ்வொரு மனிதனும் தன்னால் இதைச் செய்துமுடிக்க முடியுமென்று நம்புவதும், நம்பிக்கையைச் செயல்படுத்த திட்டமிடுவதும், அதை நிறைவேற்ற முயற்சி செய்யும்போது தடைகளைக் கண்டு தளர்ந்துவிடாமல், விடாமுயற்சியுடன் அதனை தகர்த்து அந்தக் காரியத்தைச் சாதிக்கும் மனோபாவமே தன்னம்பிகை. . தன்னம்பிக்கையே வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு வழி காட்டும் ஒளி விளக்கு என்றால் அது மிகையில்லை.. ஒருவனின் வலிமையை உணர

''ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.''
என்கிறது குறள்

ஒருவர் தம்மால் செய்யமுடியும் செயலையும் அதைச் செய்வதற்கு ஏற்ற ஆற்றலையும் அறிந்து அதையே மனதுக்குள் சிந்தித்துச் செயலாற்றுபவர்க்கு, முடியாதது ஒன்றும் இல்லை என்று கூறுகிறார் வள்ளுவர்.

முயற்சி திருவினை ஆக்கும், முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பவைகள்தான் தன்னம்பிக்கையின் தாரக மந்திரங்கள் ஆகும். பொதுவாக கால்நடைகள் குட்டிகளை ஈன்றவுடன் பிறந்த குட்டிகள் தட்டுத்தடுமாறி எழுந்து நின்று தன்னம்பிக்கையுடன் நடக்க ஆரம்பித்துவிடுகின்றன. அதுபோல் பறவையினங்களின் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தவுடன் நடக்கவும் பறக்கவும் ஆரம்பிக்கின்றன. மனிதனின் மட்டும் தான் குழந்தைப்பருவத்தில் நடக்க ஆரம்பிக்கும்போதும் முதலாவது அடி எடுத்துவைக்கும் போதும் விழுந்துவிடுவோம் என்ற பயஉணர்வை மீறி அடி எடுத்து வைக்கின்றான். அப்படிப்பட்ட குழந்தையை மெல்ல மெல்ல காலடி எடுத்துவைக்கச் சொல்லி அக்குழந்தையின் மனதில் தன்னம்பிக்கையை ஊட்டி உன்னால் நடக்க முடியும் என்று நடை பயில வைப்பதிலும் பேச கற்றுக்கொடுப்பதிலும் தன்னம்பிக்கை பயிற்சியை பார்க்கிறோம்.

குழந்தைப்பருவத்தில் தாயின் அரவணைப்பில் இருந்த குழந்தைகள் பள்ளிக்குச் சென்றவுடன்,அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பவர்கள் ஆசிரியர்கள் தான். பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் எடுத்துக் கூறுகின்ற நம்பிக்கையூட்டும் கதைகள் வலிமை வாய்ந்த சொற்கள், மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. மாணவப்பருவத்தில் மாணவர்கள் படிக்கும் நல்ல நூல்கள், மாமேதைகளின் வரலாறுகள், அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்க்கும். வெற்றி பெறும்போது கொண்டாடும் மாணவன் தோல்வியடையும் போது தன்னம்பிக்கை குறையாமல் தொடர் முயற்சி மூலம் வெற்றி பெற முடியும் என்பதை மாணவர்களுக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் போதிக்க வேண்டும்.அதுதான் சிறப்பான வழ்வியல் கல்வியாக இருக்க முடியும்.

சிலந்தி தனக்குரிய வலையைப் பின்னி முடிப்பதற்குள் எத்தனை முறை வலை அறுந்தாலும் அது திரும்ப திரும்ப விடாமுயற்சி மேற்கொள்வதை பார்த்திருக்கிறோம். அந்தச் சிலந்திக்கு சோர்வோ அலுப்போ இல்லாமல். மீண்டும் மீண்டும் முயற்சி செய்து வலையை பின்னிக்கொண்டே இருக்கும். அந்த வலை பின்னி முடிக்கும்வரை அது ஓய்வதில்லை.மனித வாழ்வில் வளர்ச்சி என்பது ஒரு வட்டப் பாதையில் சுற்றிச் சுற்றி புறப்பட்ட இடத்திற்கே வருவதல்ல. சுழன்று சுழன்று மேலே செல்லக் கூடிய சுழலேணி. இந்தச் சுழலேணியின் படிகளில் தொடர்ந்து மேலேறிச் செல்ல ஒருவருக்கு தன்னம்பிக்கை என்ற ஆற்றல் அவசியம்.

வாழ்வில் வெற்றி பெற்ற எந்த மனிதர்களின் வாழ்க்கையை புரட்டிப்பார்த்தாலும் அவர்கள் வெற்றிக்கு முதல் மூலதனமாக இருந்தது தன்னம்பிக்கைதான் என்பது புலப்படும். தன்னம்பிக்கை உடையவன் எதிலும் எளிதாக வெற்றி அடையமுடியும். தோல்வியிலிருந்து படிப்பினை பெற்றுக்கொண்டு இமாலய சாதனைகளை கூட அவர்களால் படைக்க முடியும்.
நேர்மறை சிந்தனை என்பது தன்னம்பிக்கை வளர்க்கும் ஒரு கருவியாகும். எந்த ஓர் செயலை செய்ய தொடங்கும் முன்பே இது நம்மால் முடியாது, நமக்கு சரியாக வராது என்று எண்ணினால் எப்போது நாம் வெற்றி இலக்கை எட்டவே முடியாது. மாணவ பருவத்தில் விளையாட்டு ,படிப்பு போன்றவைகளில் எதை தேர்ந்து எடுத்தாலும் அதில் நம்மால் வெற்றி பெற்று விட முடியும் ,சாதிக்க முடியும் என்று நம்பிக்கைய முதலில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.அப்போது தான் அந்த அந்த நிலைகளில் நாம் வெற்றியை சுலபமாக ஈட்டமுடியும்.

ஒரு சுண்டெலி ஒரு நாள் ஒரு ஞானியின் முன்னே வந்தது. சுண்டெலியை பார்த்து ஞானி, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். பூனையை கண்டு எனக்கு பயமாய் இருக்கிறது. என்னை ஒரு பூனையாக மாற்றிவிட்டால், உங்களுக்கு புன்னியமாய் போகும் என்றது எலி. ஞானி, எலியை பூனையாக மாற்றினார். இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அப் பூனை வந்து அந்த ஞானி முன் நின்றது. பூனையை கண்ட ஞானி, இப்போது என்ன பிரச்சனை என்று கேட்டார்.. என்னை எப்போதும் நாய் துரத்துகிறது. என்னை நாயாக மாற்றிவிட்டால் சிறப்பாக இருக்கும் என்றது பூனை. உடனே பூனையை, நாயாக மாற்றினார் ஞானி.


சில நாட்கள் கழித்து அந்த நாய் ஞானியின் முன்பு வந்து நின்றது. இப்போது உனக்கு என்ன பிரச்சனை சொல் என்று கோட்டார் ஞானி. புலி என்னை கொன்று விடுமோ என்ற பயம் என்னை வாட்டி எடுக்கிறது. தயவு செய்து என்னை புலியாக மாற்றிவிடுங்கள் என்றது நாய். ஞானி நாயை புலியாக மாற்றினார். சில நாட்கள் கழிந்து மீண்டும் ஞானி முன் வந்து நின்ற புலி, இந்தக் காட்டில் வேடன் என்னை வேட்டையாடி விடுவனோ என்று பயமாக உள்ளது தயவு செய்து என்னை வேடனாக மாற்றிவிடுங்கள் என்றது புலி. உடனே புலியை வேடனாக மாற்றினார் ஞானி. சில நாட்கள் கழித்து, வேடன் ஞானி முன் வந்து நின்றான். இப்போதும் உனக்கு பிரச்சனை தீரவில்லையா? உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. எனக்கு மனிதர்களை கண்டால் பயமாக இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்தான். உடனே இடைமறித்த ஞானி, சுண்டெலியே உன்னை எதுவாக மாற்றினாலும் உன் பயம் உன்னை விட்டு போகாது. ஏனெனில் உனக்கு சுண்டெலியின் இதயம்தான் இருக்கிறது. நீ சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு என்றார் அந்த ஞானி.

ஆகையால், நம் உள்ளத்தில் நம்பிக்கையும், அச்சமற்ற தன்மையும் இல்லையெனில் நாம் எதையும் அடையவோ, சாதிக்கவோ முடியாது. தன்னம்பிக்கை என்னும் போர்வாள் கொண்டு அச்சத்தை வெட்டி வீழ்த்தி தொடர்ந்து முன்னேறினால் சாதனை என்பது எல்லோருக்கும் சாத்தியமாகும்.

- முனைவர் சம்பத்

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 7)



# செண்பக வனம்

முன்கதை சுருக்கம்

செண்பக வனத்தில் பாம்பணி ஆற்றங்கரை சாலையில் வந்தியத்தேவன் மீது நடக்க இருந்த கொலை முயற்சி தாக்குதலை நமது கதையின் நாயகன் மாணிக்கமும் அவன் தோழன் கரியன் என்கிற புலியும் சேர்ந்து முறியடித்தனர். மறுநாள் செண்பகவனத்திற்கு வந்த ஆழ்வார்க்கடியான் மாணிக்கத்திற்கு ஏற்கனவே அறிமுகம் ஆதலால் இருவரும் மாணிக்கத்தின் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் மாணிக்கம் ஒரு சிலரால் கடத்தப்படுகிறான். கடத்தப்பட மாணிக்கமும் அவனின் நண்பன் கரியன் மற்றும் ஆழ்வார்க்கடியான் துணைகொண்டு வெகு சாமர்த்தியமாக தன்னை கடத்தி வந்தவர்களை கொன்றுவிட்டு ஒருவனை மட்டும் சிறைப்படுத்திக் கொண்டு தஞ்சை நோக்கி பயணமானார்கள்...

கைது செய்யப்பட்டவர் ரவிதாசின் என்பதை சோதனையின் போது தெரிந்து கொண்ட முன்னாள் மந்திரி அனைவரும் ஆழ்வார்க்கடியானும் கைதியை பாதாள சிறைக்கு மாற்றினர் கைதியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை எடுத்துவைத்து கொண்டு உறங்கா விழிகளுடன் விடியலை நோக்கி காத்திருந்தார்.....

இனி......

வைகறையில் வெள்ளி முளைக்க..
மறையத் தொடங்கியது மதி .. இந்திரலோகத்து தேவர்கள் வந்து நிர்மானித்த சோழ நகரமா என வந்தோரும் கண்டோரும் வியந்த அந்த தஞ்சை மாநகரம்.

பனி படர்ந்த அந்த அதிகாலையில் பறவைகள் எழுப்பிக் கொண்டிருக்கும் ''இரைச்சல்'' சப்தம் அவைகளுக்குள் உள்ள சண்டையா? இல்லை சாதாரண பேச்சா? என்று அவைகளுக்கு தான் தெரியும்.

பரந்து விரிந்து வளர்ந்திருந்த மரங்களின் இலைகளில் இறங்கிய சிறுசிறு பனித்துகள்கள் ஒன்று கூடி பெரும் துளியாகி தரையை நினைத்துக் கொண்டிருந்தான்..

வெள்ளை மாளிகைகள் நிறைந்த மாடவீதிகளில்.... நடுநாயகமாய பல தூண்களில் விளக்குகள் ஏற்றப்பட்டு வீதிகள் தோறும் ஒளி மயமாய் இருந்தன..
அத்தகைய மாட வீதி ஒன்றின் மூளையில் மாட்டு வண்டியில் வந்த இளைஞன் வேகமாய் மணியடித்தான் அதுவரை அங்கு காவல் பணியில் ஈடுபட்டிருந்த வீரர்கள் பாதி பேர் சென்று அந்த மாட்டு வண்டியை வட்டமிட்டனர்.

வீரர்கள் அனைவருக்கும் ஆவி பறக்க ஏதோ ஒன்றை கோப்பையில் ஊற்றி கொடுத்தான் அந்த வண்டி ஓட்டிய இளைஞன்.. கோப்பையில் அவன் ஊற்றியது பருத்திப்பாலா அல்லது சுக்கும் இனிப்பும் கலந்த சுடுநீரா என்பதை பருகியவர்களை கேட்டு தெரிந்து கொள்வோம் பிறகு..

பெருத்த கம்பீரமான கோட்டை மதில்சுவரின் இடையிடையே பெரிய கொப்பரையில் எண்ணெய் நிரப்பி அடர்த்தியான திரி இடப்பட்டு எரிந்துகொண்டு இருந்தது அதன் ஒளி நல்ல வெளிச்சத்தை பரப்பிக் கொண்டிருந்தது.. அது பார்ப்பதற்கு அகண்ட அகல் விளக்கு போல் இருந்தது.

கோட்டையின் முதன்மை பெருவாயில்

வலிமை மிகுந்த அயனி மரமும் வைரம் பாய்ந்த  தேக்கு மரமும் கலந்து செய்யப்பட்ட அந்த உறுதியான கோட்டைக் கதவுகளில் இடையிடையே ஈட்டி முனைகள் பாதிக்கப்பட்டிருந்தது. கதவின் இருபுறமும் அகண்ட அகல்விளக்குகள் பல வைக்கப்பட்டிருந்தது அது கொடுத்த வெளிச்சம் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு சூரிய உதயமோ என பிரமிக்க வைத்தது.

கோட்டைக் கதவுகள் காலையில் திறக்கப்பட்டு இரவு அடைக்கப்படுவது வழக்கமாயிருந்தது.

கதவுகள் திறக்கும் முன்னும் அடைக்கும் முன்னும் தூரத்தில் இருப்பவர்களுக்கு கூட கேட்கும் அளவிற்கும் எக்காளம் ஊதப்பட்டது..
கோட்டைக் கதவுகள் இருபுறமும் கண்காணிப்பு கோபுரங்களும் அதனருகே எந்த நேரத்திலும் இயக்கக்கூடிய  வில் பொறிகளும் நிறைந்திருந்தது.

பழையாறையில் நாம் பார்த்த வாயில்  காவல் அலுவலகம் போல இங்கும் ஒன்று இருந்தது ஆனால் இது மிகப் பெரியது..
அந்த அலுவலகத்தின் உள்ளே சிறிதும் பெரிதுமாய் பல மேசைகள் இடப்பட்டு அதன் முன்னே கடமையே கண்ணாய் பார்த்துக்கொண்டிருந்த வீரர்கள் அவர்கள் முன் இடப்பட்டிருந்த ஓலைகளில் எதையோ சரி பார்த்துக் கொண்டிருந்தனர். அது

பார்ப்பதற்கு ஒரு அலுவலகமாக இருந்தாலும் அதன் உள்ளே பல பணிகள் நடந்து கொண்டிருந்தன.

கோட்டைக்குள் வருவோரும் போவோரும் கணக்கெடுக்கப்பட்டு இருந்தனர். ஒரு நாளைக்கு எத்தனை பேர் வருகிறார்கள், எத்தனை பேர் போகிறவர்கள், வருகிறவர்களின் விவரம் என்ன? போகிறவர்கள் விவரம் என்ன ?

வருபவர்கள் எத்தனை நாட்கள் தங்குவார்கள்?

எதற்காக வந்திருக்கிறார்கள்?

வந்தவர்கள் கொண்டு வந்ததென்ன, கொண்டு போவதென்ன, என அனைத்திற்குமான தகவல்கள் அங்கு சேகரிக்கப்பட்டது..
இப்படி பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்த அந்த அலுவலகத்தில் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த பெரிய மேசையின் முன்பு அமர்ந்திருந்த நடு வயதுக்காரரை பார்த்தால் அவர்தான் அங்கு தலைமைப் பொறுப்பு என்று நன்கு புலனாகும். அவரிடம் வந்த வீரன் ஒருவன் இன்று வந்தியத்தேவனும் குந்தவை நாச்சியார் வருகிறார்கள். என்று எழுதப்பட்டிருந்த ஓலையை அவரிடம் கொடுத்துவிட்டு சென்றார்.

அதைப் பார்த்த தலைமை வீரர் அலுவலகத்திற்கு உள்ளே மட்டும் கேட்கும்வண்ணம் ‘‘கவனியுங்கள்‘‘ என்றார்.

அதுவரை பரபரப்பாய் இருந்தது அலுவலகம் அப்படியே அமைதியானது தலைமை வீரன் வாயை மட்டும் பார்த்துக்கொண்டு இருந்தது.

‘‘இன்று காலை  சோழ இளவரசி குந்தவை நாச்சியாரும் வந்தியத்தேவரும் கோட்டைக்கு வருகிறார்கள். தோரணங்களை புதுப்பியுங்கள் வாயிலுக்கு வரும் வழிகளை சரி ஆக்குங்கள்  வரவேற்புக்கு தயார்படுத்துங்கள்’’ என்றார்..
அலுவலகம் மீண்டும் அதன் பணியை  தொடங்கியது.. சோழ இளவரசியையும் வந்தியத்தேவனையும்  வரவேற்க ஆயத்தப்படுத்தத் தொடங்கினார்கள்..

கோட்டை வாயிலின் உள்ளும் புறமும் வாயிலுக்கு அடுத்தாற்போல பல சத்திரங்கள் இருந்தன. வாணிப சத்திரம்,  நாட்டு சத்திரம், தேச சரித்திரம் என்ற பல வகையில் பல வசதிகளுடன் சத்திரங்கள் காணப்பட்டன. கோட்டைக்கு வெளியில் உள்ள சத்திரத்தில் அத்துணை ஆடம்பரங்கள் இல்லை என்றாலும் தேவைக்கேற்ப இரவு தங்குதலுக்கன வசதிகளுடன் கூடியதாய் இருந்தது.
காரணம் இரவைத் தாண்டிய தங்குவதில்லை.
அங்கு யாரும்... ஆனால் கோட்டைக்குள் இருக்கும் சத்திரமோ அத்துணை ஆடம்பரமாய் வசதிக்கேற்ப விதவிதமாய் இருந்தது.
அந்த அதிகாலையும் கூட கொஞ்சம் பரபரப்பாய் தான் இருந்தது அங்கு...

காலை சிற்றுண்டி எல்லாம் தயாரான நிலையில் கடைசியாய் எண்ணெய் சட்டியில் பசு நெய் ஊற்றி இளஞ்சூட்டில் மலையகத்து  மிளகிட்டு சேரநாட்டு சீரகம் கருவேப்பிலையும் சேர்த்திட்டு வதக்கி.  காவிரிக்கரையில் விளைந்த அரிசி பொங்கல் மீது ஊற்றும்போது எழுந்த சப்தமும் வாசனையும் அங்கு சத்திரத்தில் இருந்த அனைவரின் வாயிலும் எச்சில் ஊறச் செய்தது...

இரவு பணி முடிந்து வீட்டுக்கு திரும்பும் ஆட்கள் நெடுந்தூர பயணிகள் என கோட்டைக்கு உள்ளே வாயிலில் பலரும் காத்திருந்தனர் கோட்டை வாயில் திறக்க அதேபோல கோட்டைக்கு வெளியே வணிகர்கள் அலுவலர்கள் பணியாட்கள்.

தயிர் விற்போர்
 மீன் விற்போர்
  பலகாரங்கள் விற்போர்
அயல்நாட்டு வணிகர்கள்

என பலரும் காத்திருந்தனர் அப்படி காத்திருந்த கூட்டத்தின் நடுவே இரண்டு பலகார கூடையுடன் பாட்டனும் பேரனும் வரிசையில் காத்திருந்தனர். தரையில் இருந்த இரண்டு கூடைகளின் அடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த பாட்டன் குத்துக்காலிட்டு முழங்கால் கட்டி தலைகவிழ்ந்து சற்றே கண்ணயர்ந்தார். பேரன் ‘‘ருதிரணுக்கு’’ உறக்கமில்லை நின்றான் நடந்தான் கற்களை ஏத்தி விளையாண்டான் எல்லாம் அலுத்து போக அங்கே ஒற்றைத் தூணாய் நின்ற மரத்தின் மீது சாய்ந்து அடுத்து என்ன செய்யலாம் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தான். அந்த சிறுவனின் செயலைக் கண்ட கூட்டத்தினரிடையே பெருத்த சலசலப்பு எழுந்தது.
அந்த சலசலப்பு ஏற்படுத்திய பதட்டத்தில் எழுந்த பாட்டன் பேரனை பார்த்தான்.

‘‘ருத்ரா என்ன செய்துவிட்டாய்? இங்கே வா!‘‘ என்றார்

‘‘ஏன் பாட்டா ? நான் என்ன பிழை செய்தேன் ? ஏன் இத்தனை கோபம் ? ‘‘என்றான் ருத்ரன்.

‘‘அது எந்த தூண் தெரியுமா?‘‘ என்றார் பாட்டன்

‘‘ தெரியாது பாட்டா‘‘ என்றான் ருத்ரன்.

எழுந்து நின்ற பாட்டன்  கண்களில் பெருமையின் தீப்பற்றி எரிய தலை முதல் பாதம் வரை இருந்த முடிகள் அனைத்தும் நிமிர்ந்து நிற்க ‘‘ இந்த தூண் தான் நம்ம சின்ன ராசா ஆதித்த கரிகாலன்  வீரபாண்டியர் தலையை வெட்டிக் கொண்டு வந்து தலைமுடியில் கயிறு கட்டி கொடிபோல் ஏற்றிய வெற்றித்தூண்.‘‘ என்ற பாட்டனின் குரலில் பெருமையும் தீரமும் செருக்கும் நிறைந்திருந்தது. அதைக் கேட்ட மாத்திரத்தில் தூண் முன்பு நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து  அதை வணங்கி எழுந்து நின்று‘‘ சோழம் சோழம்‘‘ என்றான் ‘‘ருத்ரன் ‘‘

அந்த முழக்கம் வெற்றி முழக்கம் தீயாய் பரவியது கூட்டத்தில் வாயில் திறக்க காத்திருந்த அனைவரும் '' சோழம்'' ''சோழம்'' என்று இட்ட முழக்கம் கோட்டைக்கு வெளியேயும் உள்ளேயும் எதிரொலித்தது.

## பயணம் தொடரும் ...

# பயணமே வாழ்க்கை

நம் வாழ்க்கையோர்
பயணம் ரயில்
பயணம் போலே...

பலர் வருவர்...போவர்...
எல்லாம் சூழல்
செய்யும் சூழ்ச்சி...

சிலர் சில நேரம்
பயணத்தை பாதியிலேயே
பயணித்து பறப்பர்...

இன்னும் சிலர்
அன்பிற்கு
உரியவராய் மாறி
காலம் நேரமறியா
பிரிவை நோக்கி
நம்மோடு பயணிப்பர்.

சிலர்
மறக்க முடியாத
நினைவுகளை
கொடுத்துவிட்டு
சூழ்நிலை கைதியாய்
இறுதியில் இறங்கிவிடுவர்...

இவையாவும்
பல அனுபவங்கள்
சில துன்பங்கள்
கலைந்த கனவுகள்...
நிறைவேறா எண்ணங்கள்...

என பலவிதங்களாய்...
மாறி போன தருணமே
இரயில் வண்டி பயணமான
வாழ்க்கை...

~ இலக்கியா இளவரசன்

ஓவியம்
பிரியா மன்னை



# குழந்தையாக மாறுவோம்

கருவறை என்னும் கோவிலில் கரு என்ற
வடிவில் இருந்தேன் அம்மா உன்னில்!!

பத்து மாதம் கடந்து காது கிழிய கத்தி !!
என்னை உலகிற்கு காட்டினாள் தாய்!!
கடந்து விட்ட பத்து மாதம் கதை நிறைய
சொல்லும் குழந்தைகளின் ஆயுட் காலம்!!

முதலில் பார்த்த முகம் அம்மா!!

முதலில் சொன்ன சொல் அம்மா!!
சொற்கமே என் வசம்!! சுவைத்த முதல்
உணவு என் அம்மாவின் அமிர்தமான
பால்!! ஆயிரம் உணவுகள் உலகில்
இருந்தாலும்!! உயிர் கொடுத்து! நம்மை
வளர்த்த முதல் உணவு என் தாய் பால்!!
உளறி உளறி பேசும் உணர்வை தூண்டும்!!
உயிர் மீட்கும்!!

குழந்தை மனம் !!

குறும்பில் நம்மை சிலிர்க்க வைக்கும்!!
சிரிப்பில் நம்மை மூழ்கடிக்கும்!
சிதறிய முத்துகளாய் சிறகடிக்கும்!!

சிட்டுக் குருவி போல் அன்பை பகிரும்!!
பணம் என்ற பித்தை விரும்பாது!!

பாசம் என்ற பிடிவாதத்தை வெறுக்காது!!

முதல் கல்வி பயிலும்!!
பால்வாடியில் அடியெடுத்து வைக்கும் !!

அதன் அர்த்தம் உணராது!!
ஆனால் ’அ’ என்ற எழுத்து சொல்லும்
போது அறியும்!!
இது நம் அம்மா கற்று தந்தது என்று!!

வாழும் வரை தெரியாது!!
வாழ்க்கை எப்படி இருக்கும் என்று!!

அழவைக்கும் அலைய வைக்கும்!!
ஆனால்? கைவிட்டு விடாது!!

அன்று வாழ்ந்தேன்!!
இன்பமாய் இருள் நீக்கி!!

இதயத்தை இனிப்பாக்கி!!

இடியை மேளமாக்கி!!
இளமையை ஊஞ்சலாக்கி!!

இரவை குடையாக்கி வாழ்ந்தேன்!!
குழந்தை பருவத்தில்!!

சாதி, மதம், இனம், மொழி கடந்து!!
இடி, மழை, வெயில், மறந்து!!

கல், மண், முள், ஏறி!!
பெண், ஆண் பாகுபாடு நீக்கி!!

பனை மரம் ஓரம்!! வாய்க்கால் வரப்பில்!!
விளையாடிய காலம் எங்கே!!

வற்றிய நீரோடையில் தண்ணீர் வந்தது
போல்!!

ஓடிய காலங்கள் மீண்டும் வர வேண்டும்!!
மனதை குழந்தையாக மாற்றுங்கள் !!

தினமும் குழந்தைகள் தினம்
கொண்டாடுவோம்!!!

--

பா.எழிலரசி
முதலாம் ஆண்டு, இளங்கலை புவியியல்,
அ. வீரய்யா வாண்டையார் ஸ்ரீ பூஷ்பம்
கல்லூரி (தன்னாட்சி)
பூண்டி

# மனித மனம்!!!



திவ்யா வசந்தன்

வணக்கம் தோழமைகளே!!

இன்று நம்மில் பலருக்கு புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கும் விடயத்தில் ஒன்று '' மனம் ''.

மனம் என்பது புரியாத புதிர். மனம் என்பது நிலையற்றது. அது அதன் போக்கில் அலைப்பாய கூடியது என்றெல்லாம் சில கருத்துகள் இருக்கிறது. சரி ''மனம் '' என்றால் என்ன? என்பதை பற்றி எனக்கு தெரிந்த நான் கேட்டறிந்த சில விடயங்களை இங்கே எழுதுகிறேன்.
ஒவ்வொரு மனிதன் செய்யும் செயலுக்கு துணையாக இருப்பது இரு கருவிகள். ஒரு செயலை செய்ய அவனுக்கு துணையாக இருக்கும் கண், கை, கால், காது இவை அனைத்தும் புறக்கருவிகள் . அந்த செயலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வரும் அல்லவா? அது அகக்கருவி, அதையே நாம் மனம் என்று சொல்கிறோம்.

மூளையும், மனமும் இணைந்து தான் எப்போதுமே செயல்படும். மூளை நம் வெளிச்செயல்களை செயல்படுத்துவது. மனம் நம் உள்செயல்களை வெளிப்படுத்த உதவுகிறது. ஒரு மனிதன் ஒரு பயத்திலோ அல்லது ஏதேனும் கஷ்டத்திலோ இருக்கும் போது அவனுடைய மூளையில் இருந்து வெளிப்படும் சில ரசாயனங்கள் அவனுக்கு மன அழுத்தத்தை கொடுக்கும் .ஆகையால் மூளையே மனதை இயக்குகிறது. என்பதை நாம் தெரிந்தது கொள்ள வேண்டும்.

மனம் நான்கு செயல்களை செய்யும்போது நான்கு பெயர்களால் அழைக்கப்படுகிறது. அவை மனம், சித்தம், அகங்காரம், புத்தி.

1 மனம் :
சந்தேகம், குழம்பிய மனநிலை இருக்கும் மனநிலை, தெளிவாக தீர்மானம் செய்ய முடியாமல் இருக்கும் மனநிலை இதை ''மனம்'' என்று சொல்வார்கள்.

2 சித்தம் :
நம் அன்றாட வாழ்வில் நாம் பார்த்தவை, கேட்டவை, நாம் பெற்ற அனுபவங்களை சேமித்து வைக்கும் மனநிலை தான் இது .

3 புத்தி :
எது சரி? எது தவறு ? என்று யோசிக்கும் நிலையில் இது தான் சரி என்று முடிவு எடுக்கும் மனநிலை தான் புத்தி.

4 அகங்காரம் :
''நான் '' என்ற எண்ணம் ஒருவனுக்கு எழும் மனநிலையே அகங்காரம்.

இப்படி ஒவ்வொரு மனநிலையை அறிந்து நாம் செயல்பட்டாலே நம் மனதை நாம் கட்டுப்படுத்தி விடலாம்.
மனதில் உறுதி வேண்டும் என்ற பாரதியார் பாடலை நாம் அனைவரும் அறிந்ததே. நம் மனதில் உறுதியாக ஒரு எண்ணத்தைக் கொண்டு செயல்பட்டால் கண்டிப்பாக வெற்றியை அடையலாம். நம் மனதை எப்போதும் உற்சாகமாக இளமையாக வைத்து சிந்தித்து செயல்படுங்கள். நல்ல எண்ணங்களை மனதில் சேமித்து வையுங்கள். கோபம், போட்டி, பொறாமை, வஞ்சம் இப்படி அனைத்தையும் தூக்கி எறியுங்கள். நம் மனதை நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்து கொண்டால் எதையும் எளிதாக செய்து விடலாம் .

மற்றவர்கள் மனதில் அன்பை விதையுங்கள், கண்டிப்பாக ஒருநாள் வளர்ந்து மரமாக உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். சந்தோஷம், உற்சாகம் இவைகளை வெளியில் தேடாமல் உங்களுக்குள் தேடினால் மனம் அமைதியாகும் வாழ்க்கை இனிமையாகும்.!!!

- திவ்யா வசந்தன்

---

# மன்னிப்பவருக்கு நீண்ட ஆயுள்!

மன்னிப்பவருக்கு ஆயுள் எப்படி நீடிக்கும்? மன்னிக்கப்பட்டவருக்கு ஆயுள் நீடித்தால் அதில் அர்த்தம் உள்ளது என்ற கேள்வி நமக்குள் வரலாம்

பிறர் செய்த தவறை துரோகத்தை நாம் மன்னிக்கும்போது நமக்குள் இருக்கும் உணர்ச்சிகள் நம்மை அறியாமலேயே வெளியேறி விடுவதால் உடலுக்கும் மனதுக்கும் நிம்மதி அதிகரிப்பதால் நீண்ட ஆயுள் பெறலாம். அமெரிக்காவின் மெக்சிகன் பல்கலைக்கழக ஆய்வின்படி ஒருவரை மன்னிக்கும்போது நமக்குள் நல்சிந்தனையும் இல்லையெனில் குற்ற உணர்வும் நமக்கு மேலோங்கும்.

மன்னிப்புக்கும் மனித ஆயுளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மன்னிப்பதால் பகை உணர்வும் பழிவாங்கும் குணமும் குறையும். நம்முடைய தலைக்கனம் தரைமட்டமாகும்போது மன்னிப்பு தானே வெளிவரும். மன்னிப்பு கேட்கக்கூடாது என்பதை நம்மில் பலர் கொள்கையாகவே வைத்துள்ளோம். அதை தவிர்த்து மன்னிப்போம், மறப்போம். நமது ஆயுளை நாமே நீட்டிப்போம்.

--
தர்ஷினி நாகூரான்

# கத்திக்கப்பல் (சிறுகதை)


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

திருப்பூர் சாலைகளில் பெருமழை ஓய்ந்து ,அதன் அடையாளமாக ஆங்காங்கே சீரற்ற வடிகால் அமைப்பினால் பல தெருக்களில் தண்ணீர் தேங்கியது.

கொசுக்களுக்கும், தட்டான்களுக்கும், தவளைகளுக்கும் திடீர் என ஒரு புதிய உறைவிடம் ஒருவரை ஒருவர் அழித்து வாழும் அனைவரும் ஒரு குடையின் கீழ் வாழும் சமத்துவத்தை உணர்த்தியது.

அந்த சிறிய நீர்த்தேக்கத்தில் அதற்கு ஏற்றாற் போல் ஒரு காகித கப்பல் பயணப்பட்டு கொண்டு இருக்கிறது. அந்த கப்பலோட்டிய தமிழன், அதை ஆனந்தத்துடன் கண்டு களிக்கிறான். ஆம். இவன் பெயரும் சிதம்பரம் தான்.

பல வருடம் குழந்தை இல்லாத இவன் பெற்றோருக்கு சிதம்பரம் நடராசர் கோவிலுக்கு சென்று வந்த உடன் இவன் பிறந்த காரணத்தால் இந்த பெயர் வைக்கப்பட்டது. இதுதான் பெயர்க்காரணம். (காரணப் பெயர் என்றும் வைத்துக் கொள்ளலாம்).

அவன் கப்பலுக்கு பக்கத்தில் புதிதாக ஒரு கப்பல் வருகிறது.சிதம்பரத்தின் நண்பன் விட்ட கப்பல் தான் இது.

(கதையின் முக்கிய பாத்திரம் சிதம்பரம் என்பதால் இனி வரும் அனைத்து பாத்திரங்களுக்கும் சிதம்பரத்தை வைத்தே அறிமுகப்படுத்தலாம்)

அவன் நண்பன் விட்ட கப்பல் சிதம்பரத்தின் கப்பலை விட சற்று மாறுபட்டது போல் தோன்றியது நம்ம சிதம்பரத்திற்கு. கேட்டே விட்டான். அவர்கள் உரையாடல் தொடர்கிறது.

''என்னடா உன் கப்பலில் கீழே ஏதோ நீட்டிக் கொண்டு இருக்கு. என்ன அது''

''அதான் கத்திக் கப்பல்''.

''அப்படினா''

''உன் கப்பல் தத்தி கப்பல். என் கப்பல் கத்தி கப்பல்.''

''என் கப்பல் தத்தி கப்பல் இல்லை. நல்ல கப்பல் தான்''

''உன் கப்பல் தத்தி தான்.கடல் ல கப்பல் போகும் போது சுறா மீன் எல்லாம் வந்து கப்பலை தாக்கும். அப்ப கத்தி கீழே இருந்தா சுறாவை கொன்னுடும். சாதா கப்பல்ன்னா அவ்ளோதான். நாம காலி''

உடனே சிதம்பரத்தை பயம் தொற்றவில்லை (அவன் என்ன உண்மையான கப்பலா விட்டுக் கொண்டு இருக்கிறான்). ஆர்வம் பற்றிக் கொண்டது.

''டேய்! இது எப்படி பண்றதுன்னு சொல்லிக் கொடுடா''

''அதுக்கெல்லாம் அறிவு வேணும்டா''

''ஏன் தாள் இருந்தா போதாதா''

''இந்தா தாள்! எங்க செய் பார்ப்போம்''

''எப்பிடின்னு சொல்லிக் கொடுடா''

''இந்த தெருவுலயே என் கப்பல் மட்டும் தாண்டா கத்திக்கப்பல், உனக்கு சொல்லி கொடுத்தா அப்பறம் எனக்கு போட்டியா நீயும் வருவ''

தொடர்ந்து கெஞ்சி தோற்றுப் போகவே, அவமானத்தில் வீட்டுக்கு செல்கிறான்.

வீட்டிற்குள் சிதம்பரத்தின் அப்பாவும், அம்மாவும் ரொம்ப சோகமாகவும், கோபமாகவும் புலம்பிக் கொண்டும், கார சாரமாகவும் விவாதித்துக் கொண்டு இருப்பதைப் பார்க்கிறான்.

அவர்கள் எதைப்பற்றி பேசிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது சிதம்பரத்தை போலவே நமக்கும் தெரியாது. அது இந்த காட்சிக்கு தேவை அற்றது.

அப்பாவிடம் செல்கிறான்.

‘‘அப்பா !எனக்கு கத்திக் கப்பல் எப்படி செய்றதுன்னு சொல்லிக் கொடுங்க‘‘ கொஞ்சம் கோபமாகவே கேட்டான். பிள்ளைகளுக்கு சூழல் எப்படி புரியும்.

‘‘மழை நேரத்துல வெளியே சுத்தாம போய் ஒழுங்கா படி’’

‘‘மழை தான் விட்டுடுச்சே’’

‘‘மழை விட்டா வெளியே ஈரமா இருக்காதா?? போய் படிடா’’

‘‘இன்னிக்கு தான் ஞாயிற்று கிழமை யாச்சே’’

‘‘ஏன் ஞாயிறுனா படிக்க மாட்டியா?’’ உன்னை வருசம் 30000 ரூ கொடுத்து எதுக்கு பள்ளிக்கூடத்துல சேக்கணும்?? மழைல போய் கப்பல் விடவா??’’

விடாக்கண்டனின் விவாதம் கடைசியில் எப்போதும் போலத்தான் முடிந்தது.

பழுத்த கன்னத்துடன் தீரா அழுகையோடு இரவு உணவு கூட உண்ணாமல் தூங்கி விட்டான்.

பலமுறை அவர்கள் எழுப்பியும் பயன் இல்லை.

‘‘வேலை ல உள்ள பிரச்சனையை ஏன் நீங்க குழந்தைகிட்ட காட்டுறீங்க.புள்ள பாவம் பசியோடு தூங்கிட்டான்’’

‘‘நான் இருக்கிற நிலமை உனக்கு புரியுதுல. இவன் வேற நேரம் காலம் புரியாம வந்து தொல்லை பண்றான்’’

‘‘நமக்கு இப்ப நேரம் சரி இல்லைங்க. எல்லாம் நடராசர் புண்ணியத்துல நல்லா தான் நடக்கும். நாளைக்கு உங்க மேலாளர் கிட்ட போய் பேசிப் பாருங்க. எல்லாம் நல்ல படியாத்தான் நடக்கும்.இந்த வாரம் கோவிலுக்கு போய்ட்டு வருவோம்.‘‘

‘‘எனக்கு என்னமோ நம்பிக்கை இல்லை.அவனுங்க ரொம்ப உறுதியா இருக்கானுங்க. பார்ப்போம். வேற ஏதாவது வழி இருக்கான்னு’’

நீண்ட நேரம் ஆறுதல்களோடு கூடிய விவாதம் தொடர்ந்தது விடிவை நோக்கி.

விடிந்தது பொழுது.

அன்று சீக்கிரமே ஆலைக்கு கிளம்ப ஆயத்தமானார். கிளம்பும் முன் மகனை ஒருமுறை பார்த்து விட்டு செல்வோம் என்ற முந்தைய நாள் நடந்த சம்பவத்தின் குற்ற உணர்ச்சியோடு அவன் தூங்கும் இடத்திற்கு சென்றார்.

எப்போதும் 7.45 மணிக்கு எழும் பழக்கம் உள்ள பையன் அன்று மட்டும் 7.30 மணிக்கே வா எழப் போகிறான்.

தூங்கும் பிள்ளைக்கு முத்தங்கள் பதித்து விட்டு வாசலுக்கு வருகிறார். (பல குழந்தைகளுக்கு தன் தந்தை தன்னை கொஞ்சுகிறார் என்பதே தெரியாது. இரவு

நேரம் கழித்து வருவதும், காலை சீக்கிரமே செல்வதையும் வாடிக்கையாகி போன பல தகப்பன்மார்களின் இயந்திர வாழ்வினால்)

‘‘எல்லாம் நல்ல படியாத்தான் நடக்கும். பயப்படாம போய்ட்டு வாங்க‘‘

மனைவியை ஆமோதித்து விட்டு வண்டியின் கிக்கரை (kick) உதைக்கிறார். என்ன செய்ய button start வேலை செய்ய வில்லை. அதை சரி செய்ய இப்போது மனமும் இல்லை. பணமும் இல்லை. இரண்டு மாத சம்பளப் பாக்கி.

எப்போதும் 50, 60ல பறக்கும் அவர் வண்டி இன்று 30ல போவது அவரின் மன சஞ்சலத்தை சொல்லியது.

சனிக்கிழமை ஆலையில் நடந்த சம்பவங்கள் மனக்கண் முன்னே ஓடுகின்றன.

‘‘என்ன பண்ண சொல்றிங்க. முன்ன மாதிரி இப்ப வேலை வரமாட்டேங்குது. வந்தாலும் ஏகப்பட்ட வரி போடுறாங்க. முன்ன மாதிரி இப்ப தொழில் சிறப்பா பண்ண முடியல. எனக்கு அப்பறம் ரொம்ப கடினமா போச்சு. இதுல எண்ணெய் விலை ஏறிப் போனதுல, நம்ம மூலப்பொருள் கொள்முதல் விலையும் ஏறிப் போச்சு. அதுக்காக துணி விலையை ஏத்த முடியல. சந்தையில நெறைய வெளிநாட்டு துணிமணிகள் கிடைக்குது. அவன் அவன் ஜாக்கி மாதிரி உள்ளாடை வாங்கிட்டு போய்டுறான்.

இப்படியே போனா நாங்க ஆலையை மூடிட்டு போய்ட வேண்டியது தான். அதுக்குத்தான் இப்ப பல பேரை வேலை நிறுத்தம் செய்யப் போறோம். கொஞ்சம் புரிஞ்சுகங்க. உங்களுக்கு கூட ரெண்டு மாசம் சம்பளம் தரல. அது மாதிரி எத்தனை மாசம் வரைக்கும் நீங்க வேலை செய்ய முடியும்?? உங்களை நல்ல முறையில் செட்டில் பண்ணி அனுப்புறோம்‘‘ மேலாளர்.

‘‘ஐயா! அப்படி ஒரு முடிவுக்கு உடனே வராதீங்க. நான் இங்க ரொம்ப நாளா வேலை பார்த்துகிட்டு வரேன். என் மேலே ஒரு புகாரும் இல்லை. விடுப்பு கூட நான் எடுத்ததில்லை. தேவைப்படும் போது எல்லாம் நேரம் காலம் பாக்காம வேலை பார்த்து கொடுத்து இருக்கேன். நீங்களே பலமுறை என்னை பாராட்டி இருக்கீங்க’’

‘‘நான் மறுக்கலயே. இப்ப கூட உங்களை வேலையை விட்டு அனுப்ப தனிப்பட்ட முறையில் எனக்கு விருப்பமில்லை. ஆனால் நிர்வாக முடிவு அப்படி. நான் என்ன செய்ய. நாளைக்கு எனக்கே இப்படி ஆகலாம்’’

‘‘நான் வேணும்னா ஒருமுறை முதலாளி கிட்ட ஒருமுறை பேசிப் பார்க்கவா’’

‘‘அது வீண். உங்களை மாதிரி 50 பேர் இருக்காங்க. எல்லாரும் இப்படி பேச ஆரம்பிச்சா எப்படி?? சொன்னா புரிஞ்சுக்குங்க. கம்பெனி நட்டத்தில் போகுது. கூடிய விரைவில் மூடினாலும் ஆச்சர்யபடுறதுக்கு இல்ல.’’

‘‘ஐயா நீங்க இப்படி சொல்றிங்க.ஆனா புதுசு புதுசா பீகார், உத்தர பிரதேசத்துல இருந்து நெறைய வட இந்தியர்களை வேலைக்கு சேர்த்துகிட்டு இருக்கீங்களே. அது எப்படி ?? மூடப் போற கம்பெனிக்கு எதுக்கு புது ஆள்?’’

‘‘அது நிர்வாக விசயம். உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை’’

‘‘ஐயா நீங்க என் கூட நல்ல பழகி இருக்கீங்க. அந்த முறையில தான் கேக்குறேன். தயவு செய்து என்ன பிரச்சனைன்னு சொல்லுங்க’’

''சம்பளம் தான் பிரச்சனை. நீங்க வாங்குற சம்பளத்தை விட குறைவான சம்பளத்திற்கு வேலை செய்றாங்க. அதான்''

''சம்பளம் தான் பிரச்சனைனா என் சம்பளத்தை வேணும்னா கொஞ்சம் குறைச்சுகங்க. ஆனா வேலையில் வச்சுக்கங்க''

''என்னது கொஞ்சம் குறைக்கனும் மா. கீ கீ கீ. அவன் நீங்க வாங்குற சம்பளத்துள பாதிக்கு கீழே தான் வாங்குறாங்க. அது மட்டும் இல்லை. நீங்க 8 மணி நேரம் தான் வேலைப் பார்ப்பிங்க அதுக்கு மேல பார்த்தா கூடுதல் வேலை நேரம் (Overtime) தரணும். ஆனா அவங்க 12 மணி நேரம் கூடுதல் வேலை நேரம் இல்லாம வேலை பார்ப்பாங்க. அப்ப நீங்களே சொல்லுங்க. நிர்வாகம் யாரை வச்சுக்கும்''

''இது அநியாயம். விதிமுறை மீறல். தொழிலாளர்களுக்குன்னு சில நியாயமான உரிமைகள் இருக்கு. அதை எல்லாம் மீறி சட்ட விரோதமா நடக்குறிங்க''

''நியாயம்தான். என்ன பண்றது. நம்மல சுத்தி எதுவுமே நியாயம் இல்லை. அரசாங்கமே அப்படித்தான் இருக்கு. இதுல நம்மல மாதிரி குடி மக்கள் என்ன செய்ய முடியும்??

இப்ப உங்களையே எடுத்துங்கங்க. தஞ்சாவூர் பக்கம் உங்க ஊரு. பரம்பரை உழவு குடும்பம். அப்பறம் ஏன் திருப்பூருக்கு கூலித்தொழிலாளியா பிழைக்க வந்தீங்க.''

''ஊர்ல மழை பொய்த்து போச்சு. நிலத்தடி நீர் கீழே போய் உப்பாப் போச்சு. காவிரித் தண்ணியும்  வருடா வருடம் தண்ணிக் காட்டுச்சு. தப்பித் தவறி ஏதாவது ஒரு வருடம் வந்தாலும், காவிரிப்படுகை பகுதில மீத்தேன் எரிவாயு எடுக்கிறதுக்காக உழவு தழைக்க கூடாதுங்கிற நோக்கத்தில அரசாங்கமே தண்ணியை காவிரி பாசனத்திற்கு விடாம கொள்ளிடம் வழியா கடலுக்கு அனுப்புது. அப்பறம் எங்க உழவு பாக்க. உரம், பூச்சி மருந்து, விதைக்கு வாங்குன கடனை அடைக்க நிலத்தை வித்துப் புட்டு குடும்பத்தோடு இங்க பஞ்சம் பிழைக்க வந்தேன் ஐயா''

''இங்க எங்கேயும் நியாயம் இல்லை. எங்ககிட்டயும் இல்லை. இதான் இன்னைய நிலைமை. இந்தாங்க உங்க காசோலை. இதுல உங்க இருப்பு சம்பள பாக்கி இருக்கு.

இது உங்க வேலை நிறுத்த கடிதம் எடுத்துகங்க. வாழ்த்துகள். நல்லா வருவிங்க எதிர்காலத்துல.''

''ஐயா இந்த வேலையை நம்பி என் புள்ளையை தனியார் பள்ளி ல கடன் வாங்கி சேர்த்தேன். பள்ளி கட்டணம் எப்படி கட்ட.ரொம்ப பயமா இருக்கு ஐயா''

''தனியார் பள்ளில படிச்சா தான் நல்ல படிப்புன்னு எல்லார் மண்டையிலும் பதிய வச்சுட்டாங்க. ஆனா யதார்த்தம் வேற. அதை புரிஞ்சுக்கங்க. ஒரு மேலாளர் நானே என் குழந்தைகளுக்கு பள்ளி கட்டணம் கட்ட மாச கடைசில சிரமமா இருக்கு. ஒரு மோசமான சமூக கட்டமைப்பில் நாம் வாழ்கிறோம். இதில் இருந்து எப்படி விடுபடப் போகிறோம் என்று தெரியவில்லை. என்னால முடிஞ்ச உதவியை தனிப்பட்ட முறையில் நான் உங்களுக்கு செய்றேன்.

இப்ப நீங்க போகலாம். என்னை மன்னிச்சுடுங்க.''

''பரவாயில்லை ஐயா. நீங்க என்ன பண்ணுவீங்க. நான் கிளம்பறேன்''

''ஏதாவது உதவி தேவைப் பட்டா மறக்காம கேளுங்க''

''மகிழ்ச்சி''

காசோலையையும், வேலை நிறுத்த கடிதத்தையும் சட்டைப் பையில் வைத்து கொண்டு கிளம்பினார். ஆனால் என்னமோ வீட்டுக்கு போக மனம் இல்லை. சாலையில் போகின்ற வழியில் சாலையோரத்தில் ஓடிக்கொண்டு இருக்கும் வாய்க்காலின் அருகே உள்ள ஒரு கட்டையில் அமர்கிறார்.

எதிர்காலத்தை பற்றிய பயத்தோடு வெற்று விழிகளால் வாய்க்காலில் ஓடும் நீரை உற்று பார்க்கையில், அங்கே அவரை கரை சேர்க்க ஒரு கப்பல் மிதந்து வருகிறது.

நீரின் வேகத்தில் கவிழ்ந்து விடுகிறது.

பொதுவாக யாரேனும் சோகமா இருந்தால் ஏன் கப்பல் கவிழ்ந்த மாதிரி இருக்கன்னு சொல்வாங்க. அதை உணர்த்தும் குறியீடாக எங்கிருந்தோ வாய்க்கால் வழியாக வந்த காகித கப்பல் உணர்த்துகிறது நமக்கு.

ஆனால் அவருக்கோ மகன் நினைவு வருகிறது. இருக்காதா பின்ன? இனிமேல் மகனின் எந்த ஒரு பெரிய ஆசையையும் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை இழந்த சூழலில் குறைந்த பட்சம் மகனின் சிறிய ஆசையையயாவது நிறைவேற்ற முடியும் தானே.

மாலை பள்ளி விட்டு வீட்டுக்கு வருபவனிடம், ‘‘இந்தா நீ கேட்ட கத்தி கப்பல்‘‘ன்னு சொன்னா அதைப் பார்த்து குதூகலிக்கும் பிள்ளையை பார்க்கும் போது நம் மனம் அடையும் ஆனந்தம் கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்குமா?? என்று தான் ஒவ்வொரு மனமும் நினைக்கும் உண்மையில் இந்த சூழ்நிலையில் கோடி ரூபாய் அவருக்கு அதிமுக்கியமாக இருந்த போதிலும்.

பிள்ளைகள் வேறு என்ன பெரிதாக கேட்டு விடப் போகிறார்கள். அவர்கள் அதிகபட்ச எதிர்பார்ப்பு எல்லாம் ஒரு ரூபா காகிதத்திலே முடிந்து விடுகிறது. அனைவருக்கும் குழந்தை மனம் இருந்து விட்டால் ஒருவேளை அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்களோ என்னவோ ..

மனம் இப்ப கத்திக்கப்பல் செய்ய எண்ணுகிறது.பேப்பருக்கு எங்க போறது?? பக்கத்தில் பார்க்கிறார். ஆனால் அவர் கக்கத்தில் அருகே இருக்கிறது. கை தட்டுப் படுகிறது. வேலை நிறுத்த கடிதம்.

இது இனி தேவைப்படுமா?? என்ற எண்ணம் மனதிற்குள் எழுந்தாலும், என்னையே தேவை இல்லை என்று சொன்ன இந்த காகிதம் எனக்கு மட்டும் எதற்கு தேவை என்ற தெளிவான மனதுடன் கப்பல் செய்கிறார் .

முடிந்த பின் அதை நேராக பார்க்கிறார். கப்பலின் அடிப்பாகத்தில் உள்ள கத்தியில் நீங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டீர்கள் என்ற வார்த்தை தெரிகிறது. அந்த வார்த்தைதான் அவர் மனதை கத்தி போல் அல்லவா குத்தி கிழித்து விட்டது.

இப்போது வீட்டிற்கு செல்லலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்த பின் வண்டியை எடுக்கிறார்.

இப்போது சற்று வேகம் கூடுகிறது. சாலை வலையில் சீரான வேகத்தில் வண்டி திரும்புகிறது.

அதே நேரத்தில் திருட்டுத்தனமாக மணல் அள்ளிட்டு வரும் ஒரு மணல் லாரியில், வீதிக்கு வீதி மதுபான கடைகளை திறந்து வைத்து நல்ல 'குடி'மகன்களை உருவாக்கும் அரசாங்கத்தால் விற்பனை செய்யப்படும் மோசமான சரக்கு ஒன்றை அருந்தி விட்டு குடி போதையில் (சரக்கு லாரி) இருந்த ஓட்டுநர், சாலையில் உள்ள ஒரு பள்ளத்தை தவிர்க்க தவறான திசையில் லாரியை அதி வேகத்தில் திருப்ப வண்டியின் எடை தாங்காமல்

எதிரில் வந்த சிதம்பரம் அப்பா வண்டியில் மோதியது.

குடித்து விட்டு வண்டி ஓட்டிய ஓட்டுனர், அதிக அளவு மணல் ஏற்ற வேண்டும் என்ற வெறியோடு மிக அதிக எடை யோடு கூடிய லாரி, அரசால் மோசமாக பராமரிப்பு செய்யப்பட்ட ஏற்கனவே பலமுறை போடப்பட்டதாக கணக்கு காண்பிக்கப்பட்ட பழுதடைந்த சாலை, அதை அடுத்தவருக்கு பதாகை மூலம் உணர்த்தாத அரசு ஊழியரின் அலட்சியம், தலைக்கவசம் அணியாத நம் சிதம்பரத்தின் அப்பா, இவை எல்லாம் சேர்ந்து அங்கே ஒரு கோர விபத்தில் ஒரு உயிரை எடுத்து உள்ளது.

வாய்க்காலில் தூக்கி எறியப்பட்டு தலையில் கடுமையாக அடிப்பட்ட நிலையில், அவர் சட்டைப் பையில் இருந்த கத்திக்கப்பல் நழுவி வாய்க்காலில் விழுந்தது. அது தத்தி தத்தி சென்றதை ஏக்கத்துடன் பார்த்து கொண்டு இருந்தார். (சிதம்பரம் நண்பன் சொன்ன அந்த தத்திக்கப்பலின் அர்த்தம் இதுதான் போல). கடைசி நேர குடும்பம் பற்றிய சிந்தனை. ஒவ்வொரு தந்தைக்கும் தன் உயிர் போகிறது என்பதை விட, தனக்கு பிறகான நம் குடும்பம் எப்படி வாழும் என்ற பயமே அந்த உயிர் போகும் தருவாயில் எழும்.

தத்தித் தடுமாறி சென்ற கத்திக்கப்பல் நீரின் வேகத்தில் கவிழ்ந்தது சிதம்பரத்தின் அப்பாவின் நிலையை உணர்த்தும் படியாக...

--

**மன்னை செந்தில் பக்கிரிசாமி**

## அச்சம்


எதற்கு இந்த அச்சம்? சமூகம் நம் மீது திணித்த அச்சம் தான் காரணம், அறிமுகம் இல்லாத எவர் இடமும் பேசாதே, பழகாதே. இதன் மூலம் பலரை சுயநலவாதிகளாக மாற்றி இருக்கிறது. அதனால் பலர் தன்னம்பிக்கை, சுயஒழுக்கம் போன்றவற்றை இழந்து வாழ்கிறனர்.

ஆனால் நம் முன்னோர் காலத்தில் எவரை பார்த்தாலும் வாருங்கள் என்று அன்போடு விசாரிப்பார்கள். அப்ப இருந்த சமூக அக்கறை, நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் அழிந்து வருகிறது. அதனை பார்த்து அச்சம் ஏற்படுகிறது.



**- ஜெ.ஜவஹர்**
**மன்னை**

# தீபஒளி நெருங்கியதும்



புத்தாடை தனை விரும்பி
பட்டாடையும் பட்டாசையும்
ஒற்றை ஆளாய்
மொத்த குடும்பத்துக்கும்
முதலீட்டின் சிறு லாபத்தில்
வாங்கி சேர்த்தார் அப்பா
எக்காலமும் இவ்வாறே
பொற்காலமாய் போகுமென
எண்ணிய எண்ணத்தில்
இடியாய் விழுந்து
இணையதள வர்த்தகம்
தற்கால விளம்பரத்தில் மயங்கி
கை கால்களை கட்டிக்கொண்டு
மொத்த குடும்பமும்
செய்த இணையதள வர்த்தகத்தில்
எங்களை போன்றே ஊருக்கு
ஏனைய குடும்பம்
இருட்டில் கிடக்கிறோம் -
தீபஒளியில்!!!

~ அருண்பதி கண்ணப்பன்



# ககபோ

தலைப்பைப் பார்த்ததும் நகைச்சுவை வசனம் ஞாபகத்துக்கு வந்தால் அதை மறந்துவிடுங்கள்,

இது காலத்தை பற்றியது.

நம்மை இயக்கிக்கொண்டிருப்பது காலம்தான். அந்தக் காலத்தின் மதிப்பைப் நாம் உணராமல் வீணடித்துக் கொண்டிருக்கிறோம்.

காலம் இறந்தகாலம், நிகழ்காலம் 'எதிர்காலம் என்று மூன்றாக பிரிக்கப்படுகிறது, இந்த மூன்றை பற்றியே நம் வாழ்வும் சுழல்கிறது.

''கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து''

என்ற வான்புகழ் வள்ளுவனின் குறள்படி,

கொக்கு மீனுக்காகக் காத்திருக்கும். ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் அது நதியோரத்தில் அமைதியாய் நின்று உரிய மீன் வரும்போது, தன் அலகால் குத்திப் பிடித்துவிடும்.

காலத்தை எதிர்பார்க்கவேண்டிய பருவத்தில் கொக்கைப் போல காத்து இருந்து, காலம் வாய்த்தபோது கொக்கு மீனைக் கொத்துவதைப் போலத் தவறாமல் செய்ய வேண்டிய செயலைச் செய்து முடிக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் ஒரு விதையே. குறிப்பிட்ட காலத்தில் அதை விதைத்தால்தான் உரிய கால அவகாசத்தில் அது முளைத்துப் பயனை அளிக்கும்.

கொட்டும் மழைக்காலம் உப்பு விற்கப் போனேன்; காற்றடிக்கும் நேரம் மாவு விற்கப் போனேன் என்று கவிஞர் வாலி ஒரு பாடல் எழுதியிருக்கிறா. காலம் அறியாது செயல் செய்கிறவர்களின் சோகப்பாடல் அது. எந்தச் செயலையும் காலமறிந்து செய்வது மிக முக்கியம் என்பதை வலியுறுத்தும்.



மன்னை ராம்

காலத்தை நம் கையாள்வது, நம் மனதில் தான் உள்ளது. அதை சூழ்நிலைக்கு ஏற்ப சிந்திப்பவர்கள், செயல்படுபவர்கள் என்று கூறுவார்கள்.

உதாரணத்துக்கு நிதானத்துடன் அபாயத்தை வெல்லும் மனநிலை. இருசக்கர வண்டியில் செல்கிறோம். நமக்கு முன் ஒரு நான்கு சக்கர வாகனம் சென்று கொண்டிருக்கிறது. முந்திச் செல்ல நினைக்கிறோம். தொலைவில் எதிரில் ஒரு பேருந்து வருகிறது. பேருந்துக்கும் வாகனத்துக்கும் இடைப்பட்ட தூரம், இரண்டின் வேகம், நம் வண்டியின் வேகம் இவைகளைக் கணித்து, ஒரு சில விநாடிகளில் முடிவெடுத்து, வேகமாய் வண்டியை முந்திச் செல்கிறோம் அல்லது முடியாது என வேகத்தைக் குறைத்து வாகனத்தின் பின்னாலேயே சென்று பேருந்து கடந்து சென்றபின் காரை முந்திச் செல்கிறோம். இந்த இரண்டில் ஒன்றை நமது மனநிலை, முந்தைய அனுபவங்களின் அடிப்படையில் செய்கிறோம். இதுதான் சமயோசித புத்தி எனக் கூறுகிறோம்.

காலம் நமக்காக காத்திருப்பதில்லை: நாம் தான் காலத்துக்காக (சரியான தருணத்துக்காக) காத்திருக்க வேண்டும்.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தில் என்பது மானுடர்க்கு மட்டும் இல்லை. காலத்துக்கும் சேர்த்துத்தான். போனால் வராது. தொலைந்தால் தேட இயலாது. காலம் என்பது சக்கரம் போலச் சுழல்வது. மேலே இருப்பதைக் கீழே கொண்டு வந்துவிடும். கீழே இருப்பதை மேலே கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

இன்றைய நம் நிகழ்காலத்தில், சரியான நேரத்தில்  நமக்கான வாய்ப்புகளில் சரியான முடிவுகள் எடுக்காவிடில் அது நமது கைவிட்டு சென்றுவிடுகிறது.

பொன்னும் பணமும் போனால் தேடிக்கொள்ளலாம். ஆனால் தொலைந்த காலத்தைத் தேடிக் கண்டடைய இயலாது. அது போனால் போனது தான். அது கடந்த காலம். இறந்த காலாமாகிவிடுகிறது.

நமது  செயல்பாட்டுக்கும் அடிப்படையாக அமைவது காலம் என்ற மூலதனமே. நன்றாக யோசித்து பார்த்தால் அனைவருக்கும் வியப்பளிக்கக் கூடிய விசயம், ஏழை, பணக்காரர், அறிவாளி, படிக்காதவர் என்று அனைவருக்கும் சமமாக அளிக்கப்பட்ட ஒன்று காலம் மட்டுமே அதை யாரும் ஒருவரிடம் இருந்து எடுக்க முடியாது. திருடவும் முடியாது. யாராலும் ஒவ்வொரு நாளும் 24 மணி நேரத்திற்கு மேல் விலைகொடுத்தும் வாங்க முடியாது.

மனிதர்களாகிய நாம் ஓடவேண்டிய நேரத்தில் நடந்தாலும் நடக்க வேண்டிய நேரத்தில் தவழ்ந்து கொண்டே சென்றாலும் காலம் என்பது தன் வேகத்தை குறைப்பதில்லை. தண்டின் மேல் பூத்த பூக்கள் உதிர்ந்த பின் அவ்விடத்தில் மீண்டும் மீண்டும் புதுப்பூக்கள் பூப்பதுண்டு. ஆனாலும் பூத்த பூக்கள் கூட முன்னர் உதிர்ந்த பூவின் தன்மைக்கு இணையாக முடியாது.

ஒரு ஆண்டின் அருமை தெரிய வேண்டுமா?
இறுதித் தேர்வில் தோல்வியடைந்த மாணவனைக் கேளுங்கள்.
ஒரு மணியின் அருமை தெரிய வேண்டுமா?
காத்திருக்கும் காதலர்களைக் கேளுங்கள்
ஒரு நொடியின் அருமை தெரிய வேண்டுமா?
விபத்தில் உயிர் தப்பியவரைக் கேளுங்கள்.
ஒரு மில்லி-நொடியின் அருமை தெரிய வேண்டுமா?
ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

காலத்தை தவற விட்ட பின் நாமும் நமது வெற்றியை தோல்வியின் பாதையில் விலை கூவாமல் விற்றுக் கொண்டிருக்கிறோம்.

நேரம் குறித்த சிந்தனைகளை வளர்த்துக்கொள்வோம், நமது வாழ்க்கையை சீர்படுத்தும் மிக முக்கியமான செயல் அதுவே. சரியான செயல்களுக்கு சரியான முறையில் நேரத்தை பயன்படுத்தி கொள்வோம்.

காலம் பொன்னானது.

ஒவ்வொரு நொடியையும் பொக்கிசமாகப்

போற்றுவோம்.

காலமும் கடந்து போகும் (ககபோ)

- மன்னை ராம்

---

## போய் வாரேன்

மஞ்சள் முக தாரகை ஒன்று
மாலையிட்டு மன்னவன் வசம்
போகுதும்மா!

பெத்தவ கண்ணுக்குள்ள வச்சு வளர்த்த
கிளி தானம்மா !

மார்கழி பனியும் பார்க்க விட்டதில்ல !

சித்திரை வெயிலில் வெளியில்
விட்டதில்ல !

தூசித் தும்மல் துன்பம் செய்யுமுன்னு வீடு
சுத்தம் செய்ய விட்டதில்ல !

உடம்பு சரியில்லாம மருத்துவமனையில
நான் கிடந்தா.. மெய்யுடல்
தேறி வீடு வரும் வரை அன்னந் தண்ணி
ஏற்காம கிடந்து உருகும் என்
தாய் வரம் தான் !

எனக்கு வரம் தான் !

தோளில் தூக்கி நடக்கல..

கைப் பிடிச்சு திருவிழாவிற்கு போனதில்ல !

தொலை தூரப் பயணத்தில் துணைக்கு
வந்ததில்ல !

எங்கு போனாலும் துணைக்கு வர இயலாத
வெளிநாட்டு வாழ்க்கை தான் அவருக்கு !

ஆனாலும் அவர் நேச நெஞ்சத்தின்
பாசத்திற்கு பஞ்சமில்ல !

வெயிலும் மழையும்
தூங்காம பட்டினி கிடந்து அலைபேசியில்
பேசும் ஓரிரு வார்த்தைக்காய் வாழ்ந்த என்
அப்பா வரம் தான் !

எனக்கு பெரும் வரம் தான் !

இரண்டு வயதே பெரிதான என் பாசக்காரி !

அப்பா..ஊரில் இல்லா குறையயை தீர்த்து
வைத்த தேவதை அவள் !

எதிலும் கண்டிப்பு..
ஆழமான சிந்தனை...
எது சரி என்ற தொலைநோக்குப்
பார்வைக்கு சொந்தக்காரி !

அவள் அன்பை நேரடியாய் காட்டாத
ராட்சசி !

சண்டைகள் கோடி ஆனாலும்
யாரிடமும் எனை, விட்டு கொடுக்காதவள்!

தாய்க்கு நிகரானவள்,
அன்பு காட்டுவதில் அவளை மிஞ்சியவள்
என் அக்கா வரம் தான் !

எனக்கு வரம் தான் !

என் வீட்டு குட்டி இளவரசி
வளர்ந்த பின்னும் குழந்தையாய் துள்ளிக்

குதித்து மடி தேடி வரும் தாரகை அவள் !

ஆறு வயது சிறியவள், ஆனாலும் சரிக்கு
நிகராய் சண்டையிடுவாள் !

எப்போது பேசிக் கொண்டோம் என்று
தெரியாமலே, பேசி அடுத்த சண்டைக்கும்
ஆயத்தமாவோம் !

அவளுக்கு என் செய்கைகள் எனை
குழந்தையாய் காட்டுகிறதாம்.. சொல்கிறாள்
!

என் குட்டி இளவரசி வரம் தான் எனக்கு
பெரிய வரம்!

சுக துக்கம் அன்பு பாசம் அரவணைப்பு என
எல்லாம் தரும் என் குலசாமி என் முதல்
தோழி !

என் இறுதி பயணம் வரை துணையிருக்கும்
மாயக்காரி!

ஊஞ்சலில் அவள் ஆடும் போது
உலகையே மறப்பேன் நான்!

அவள் வரம் தான், எனக்கு வரம் தான்!

25 அகவை வரை உலகமாய் வலம் வந்த
இவர்கள் ஆகச் சிறந்த வரம் எனக்கு !

நாளை என் தாய் வீடு!
இன்று என் உரிமைக்கான கருவறை!

நாளை நல்லவை, கெட்டவைக்கு
விருந்தாளியாய் நான் வந்து போகும்
இடமாம்!

வலிகள் ஆயிரம், பெண்ணாய் பிறந்த
ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்யாணம்
இருதலை.. கொல்லி தான்
வாழ்வு முடியும் வரை !

முதல் அத்தியாயம் முடிந்தே போகுது !

இனி தாய் வீட்டிற்கும் மணாளன்
வீட்டிற்கும் அலைபாயும் இதயமாய்..
ஆரம்பமாகுது இனி..இனிதே இரண்டாம்
அத்தியாயம் !

11.11.2018. இணையேற்பு விழா போய்
வாரேன் என் அன்பு நெஞ்சங்களே,
சபையோர் கூடியிருக்க வாழ்த்த வாருங்கள்
என் நண்பர்களே !!!!!

இப்படிக்கு
**கண்ணம்மா (எ) EGR**
உள்ளிக்கோட்டை



# ஒரு தலைக்காதல்

உன்னை பார்ப்பதற்கு
மற்றவர்களுக்கு
பிடிக்காமல் இருக்கலாம்....

ஆனால்...!

உன்னை
மட்டும்தான் பார்ப்பதற்கு
எனக்கு பிடிக்குது...

உன்னிடம் பேச பிடிக்காதவர்கள்
நிறையபேர் இருக்கலாம்....

ஆனால்...!

உன்னிடம் மட்டும்தான்
பேச எனக்கு பிடிக்குது....

உன் கருவிழி அழகை
ரசிக்காதவர்கள்
இருக்கலாம்....

ஆனால்...!

உன் இருவிழியாய்
இருப்பதற்கு எனக்கு பிடிக்குது....

நீ தலைகோதும் அழகை
பிடிக்காதவர்கள்
இருக்கலாம்...

ஆனால்..!

உன் தலைமுடியாய்
மாறிட
எனக்கு பிடிக்குது...

உன் கழுத்தில் போடும் மணிமாலை
பிடிக்காதவர்கள் இருக்கலாம்...

ஆனால்..!

உன் கழுத்தாய்
மாறிட எனக்கு
பிடிக்குது....

உன் காதில் தொங்கும்
ஜிமிக்கியின்
அழகை பிடிக்காதவர்கள்
இருக்கலாம்...

ஆனால்..!

உன் காதாய் மாறிட
எனக்கு பிடிக்குது...

உன் கால் கொலுசின் ஒசையை
கேட்க பிடிக்காதவர்கள் இருக்கலாம்....

ஆனால்..!

உன் கால் கொலுசாய் மாறிட
எனக்கு பிடிக்குது....

சேலை உடுத்தி நீ நடந்தால்
நீ நடக்கும்
சாலையாய்
மாறிட
எனக்கு பிடிக்குது...

உனக்காய் அழுதிட
யாரும் இல்லாமல் இருக்கலாம்....

ஆனால்...!

உனக்கும் சேர்த்து
அழுதிட எனக்கு பிடிக்குது....

காய்ச்சல் வந்து நீ படுத்தால்
உனக்கு தாயாய்
மாறி
சேவை
செய்திட
எனக்கு பிடிக்குது...

உனக்கு ஒரு கஷ்டம்
என்றால் சந்தோஷபட
பலபேர் இருக்கலாம்...

ஆனால்...!

உன் கஷ்டத்தையும்
சேர்த்து தாங்கிக்கொள்ள
எனக்கு பிடிக்குது....

உன் கை பிடித்து நடைபழக
பிடிக்காதவர்கள்
இருக்கலாம் ...

ஆனால்...!

உன் கை விரலை மட்டும்தான்
பிடித்து நடக்க
எனக்கு பிடிக்குது...

மாதவிடாய் காலங்களில்
நீ படும் துயரத்தையும்
நீ சிந்தும் உதிரத்தையும்
போக்கும் மருந்தாய்
மாறிட
வரம் வேண்டிட
எனக்கு பிடிக்குது...

உனக்காய் மட்டும் நான் இருக்க
உனக்காய் மட்டும் நான் வாழ
ஆயுள் முழுவதும்
எனக்கு
பிடிக்குது...

என்றும் உன் நினைவுகளுடன்....

--
இப்படிக்கு,
S.S.**கார்த்திக்,** DME
உள்ளிக்கோட்டை



# வடுவூர் ஏரி...

மன்னார்குடி யிலிருந்து தஞ்சாவூர் செல்லும் குஏ 63 நெடுஞ்சாலையில் 14வது கிலோமீட்டரில் அமைந்துள்ளது வடுவூர் ஏரி. வெண்ணாற்றில் இருந்து பிரிந்து வரும் கண்ணனாற்றை நீர் ஆதாரமாக கொண்டு 316.54 ஏக்கர் பரப்பளவில் பரந்துவிரிந்து கடல் போல் காட்சி தருகிறது.

ஏரியின் நீர் தேக்கமட்டம் 1.98 மீட்டர், இதன் முழு கொள்ளளவை எட்டினால் 38.98 மி.கன அடி நீரை தேக்கலாம், இதன் மூலம் நேரடியாக 1356 ஏக்கரும் மறைமுகமாக 9100 ஏக்கரும் பாசன வசதி பெறுகிறது...

ஆறு மாதம் நீரும் ஆறு மாதம் நிலமுமாக காட்சியளிக்கும் இந்த ஏரி 80களில் கோடை வெள்ளரி சாகுபடியில் நம் பகுதியில் வெகு பிரபலம், வெள்ளரிக்காக வந்ததா வெயிலுக்காக வந்ததா என்று தெரியவில்லை வகை வகையாய் பறவைகள் வரத்தொடங்கியது...

இதனை கண்டு ஆர்வம் கொண்ட அக்காலகட்ட இளைஞர்கள் ஏரியை பறவைகள் சரணாலயம் ஆக்க தீவிரமாக முயற்சி மேற்கொள்கிறார்கள், பொதுமக்களிடையே எதிர்ப்பும் ஆதரவும் சம அளவில் இருந்த போதிலும் இளைஞர்களில் உறுதியான முன்னெடுப்பு காரணமாக 1992 பறவைகள் சரணாலயமான ஏரி அதற்காக முறையான அரசாணையை 1997ல் பெறுகிறது...

சரணாலயமாக மாறிய பிறகு வனத்துறை வசம் செல்கிறது வடுவூர் ஏரி, பொதுப்பணிதுறை அளவில் தஞ்சை சரகத்திலும் வனத்துறை அளவில் திருவாரூர் சரகத்திலும் நிர்வகித்து வருகிறார்கள் ஏரியை...

சரணாலயம் ஆகிய பின்னான நன்மைகள்:

வனத்துறை சார்பில் காடுகள் வளர்க்கப்பட்டு பறவைகள் கூடு கட்டி இனபெருக்கம் செய்யும் சூழல் மேம்படுத்தப்பட்டது, கரைகள் பலப்படுத்தப்பட்டு சுற்றிலும் தடுப்பு சுவர் மற்றும் கம்பி வேலி அமைக்கப்படுகிறது, இரண்டு பார்வையாளர் கோபுரம் அமைக்கப்படுகிறது.

இதன் காரணமாக drongo, Indian roller, Gray heron, swamp hen, jacana, malkoha, magpie robin, spotted owl, wild duck, pied kingfisher, paradise fly catcher, greater cormorant, great knot, banded stilt, Eurasian coot உள்ளிட்ட 40 வகை பறவைகள் நிரந்தர விருந்தினர்களாய் வருகிறார்கள்...

ஏரியை சுற்றி நடைபாதையும் குழந்தைகள் விளையாட்டு பூங்கா மற்றும் காட்சியரங்கம் கட்டப்பட்டு வருகிறது.

சரணாலயம் வந்த பின் ஆன இடர்பாடுகள்:

உழவர்கள் உழவு பயன்பாட்டுக்கு வண்டல் மண் எடுக்கும் முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு முறையான தூர்வாருதலும் இல்லாமல் ஏரி காலப்போக்கில் மண் மேடாகி, ஆற்றில் நீர் நின்று ஒரு வாரத்தில் ஏரியிலும் நீர் வற்றும் அவலம்...

வனத்துறை காடு வளர்ப்பில் கவனம் செலுத்தியதால் ஏரியின் 50% பரப்பு வனமாய் மாறி சிற்றேரியாய் காட்சியளிக்கிறது, ஏரியின் புகழ் பரவத்தொடங்கியது அதே நேரத்தில் உள்ளூர்

மக்களுக்கு ஏரி அன்னியப்படவும் தொடங்கியது.

தற்போதைய நிலை:

உள்ளூர் இளைஞர்களின் தீவிர போராட்டங்கள் மற்றும் அரசியல் ஒத்துழைப்பு காரணமாக சென்ற வருடம் 3.50 கோடி ரூபாய் நிதி ஏரி தூர்வார ஒதுக்கப்பட்டது, ஆனால் இது வரை அரசாணை வரவில்லை...

ஆனால் ஏரியில் உழவர்கள் ஏரியில் வண்டல் மண் எடுக்கும் நிகழ்வு வெற்றிகரமாக இந்த ஆண்டு துவக்கப்பட்டு 21000 யூனிட் மண் எடுக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட 3.50 கோடி நிதி அக்டோபர் இறுதிக்குள் கிடைக்கபெறலாம் என தகவல்கள் வந்தது. ஆனால் அதன் பின் பெரிய முன்னேற்றமில்லை. அரசு இந்த விசயத்தில் விரைந்து செயல்பட்டு நிதியை விடுவித்து முறை கேடின்றி முழுமையாக தூர்வாரி முழு கொள்ளவு நீர் நிரப்பி பயிர், பறவை, பாமரன் என அனைவரின் வாழ்வாதாரம் காக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம்...

- மலர்மன்னன்
வடுவூர்

---

# விளைநிலமா? விலைநிலமா?

விளைநிலமே!!!
உன்னை இருகரம் எடுத்து வணங்கி
மன்னிப்பு கோர்கிறேன்

நீ பச்சைபசேலன திகழ்கிறாய்,
உன் மேல் நெகிழி வீசி
கொச்சைப்படுத்துவதற்கு மன்னிப்பு
கோர்கிறேன்

நீ முன் பிறவியில் என்ன பாவம்
செய்தாய் என்று எனக்கு
தெரியவில்லை, எங்களிடம்
அவதிப்படுகிறாய்

விளைநிலமே......
எனக்கு இனிமேல் ஒரு பிறவி
இருந்தால் உன்னை போற்றி
வணங்குவேன்!

பி.கிஷோர்
12.D
அரசு மேல்நிலைப் பள்ளி
எட மேலையூர்

# என் குழந்தையின் பயம்

இன்றே குளிக்கிறேன்,
நாளை நீர் கிடைக்குமா என்று தெரியாது!

இன்றே  உண்கிறேன்,
நாளை இந்த உணவு கிடைக்காது!

இன்றே உணர்கிறேன்,
நாளை இந்த அரிசி கிடைக்காது!

இன்றே உடை உடுத்துகிறேன்,
நாளை இந்த உடை கிடைக்காது!

இன்றே சிரிக்கிறேன்,
நாளை சிரிக்க முடியாது!

இன்றே என் ஊரை சுற்றி பார்க்கிறேன்,
நாளை அகதியாய் எங்கே செல்வேன் என்று
தெரியாது!



இன்றே
சொல்கிறேன்,
நாளை நாம்
அகதிகளாய்
செல்வோம்
என்று!

இன்னும் சில
நாட்களில்
வாழ
தகுதியற்ற
நிலம்,
நம் மண்.......

நாளை??

கைட்ரோகார்போன் போன்றவைகளை
கைவிடாவிட்டால் மேற்கூறியவைகள் தான்
நடக்க போகிறது நம் நிலத்தில்.

- பிரசன்னா
மன்னை





செ. அருண்குமார்
கை வண்ணத்தில்....

# பொருளாதார சுதந்திரம்

இன்ற வெகுசன மக்கள் தேடுவது, தேடி ஓடுவது பணம் தான்.

பணம் சேர்ப்பது என்பது இங்கு தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது
நிறைய பணம் வைத்திருப்பவன் கெட்டவன் என்றும், அதை எதிர்த்து நிற்பவன் நல்லவன் என்ற மாயை நிறைந்துள்ளது.

ஒருவருக்கு உதவ வேண்டும் என்றால் மனமிருந்தால் மட்டும் பத்தாது, பணமும் வேண்டும்.

பொருளாதாரம் பற்றிய கல்வி, இங்கு எந்த கல்வி நிலையத்திலும் பயிற்றுவிக்கப்படுவதில்லை.

இங்கே படிப்பது எதற்கு? அறிவை வளர்க்க மட்டுமா? அதை வைத்து தானே பணம் ஈட்டவும் முயல்கிறோம்.

அப்போது நாம் படிக்க வேண்டியது இரண்டையும் தான்.

பொருளாதார மேம்பாடு என்பது ஒவ்வொரு தனி மனித அவசியம் இன்றைய சூழலில்.

பணம் எப்படி சம்பாதிப்பது, அதை எப்படி செலவு செய்வது, எப்படி அதிலிருந்து முதலீடு செய்து சொத்துக்களை உருவாக்குவது போன்றவை தெரிய வேண்டும்.

பணம் சம்பாதித்து அதை அப்படியே செலவு செய்யாமல் அதிலிருந்து ஒரு பகுதியை சேமிக்க வேண்டும்.

எப்படி சேமிப்பது பணமாக வங்கியிலா?



அருள்பாண்டியன்

இல்லை, மாறாக நாம் சேமிப்பது நமக்கு பலன் தர கூடிய ஒன்றாக இருக்க வேண்டும்

தங்கம், மனைகள், கடன் பத்திரங்கள், பங்குச்சந்தைகள், சிறு தொழில் முதல் பெரிய தொழில் துவங்குவது போன்றவையே சிறந்த சேமிப்பு.

நாம் செய்யும் முதலீடு, வரும் தலைமுறை காக்க பயன்பட வேண்டும்.

பணமாக சேர்த்தால் அதன் மதிப்பு உயராது.

இன்றைய சூழலில் வேலைக்கு செல்வோர் சேமித்த பணத்தில் . வண்டி வாங்குவது . வீடு கட்டுவது என்பது அனைவரின் கனவு.

வீடும் வண்டியும் சொத்து அல்ல,
நம் அத்தியாவசிய தேவை அது

நாம் வீடு கட்ட தீர்மானித்தால், பல லட்சங்கள் செலவு செய்கிறோம். கடன் வாங்கி கட்டுகிறோம்.
ஆனால் அதிலிருந்து எந்த வருமானமும் வர போவதில்லை.

மாறாக அந்த பணத்தை முதலீடு செய்து அதிலிருந்து வரும் பணத்தில் கட்டினால் வருமானம் வந்துக் கொண்டே இருக்கும்.

செலவு செய்கிற பணம் நம் முதலீட்டில் இருந்து வர வேண்டும்.

கட்டுரை பற்றிய சந்தேகங்களுக்கு

## அருள்பாண்டியன்

மின்னஞ்சல்: pandiana849@gmail.com
கைப்பேசி: 8973204042
பூவனூர்

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்